Vol.2: Issue – 4, October – 2022

ISSN : 2583-0139

# புலம் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

மெய்ப்பொருள் காண்பது அறிவு – காலாண்டிதழ்

PULAM: INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY

To Discern the Truth is Wisdom– Quarterly Journal

பதிப்பாசிரியர்
முனைவர் ச.தங்கமணி
Editor-in-Chief
Dr S.Thangamani

இணைப் பதிப்பாசிரியர்
முனைவர் ஜா.அமிர்தலெனின்

Associate –Editor
Dr J Amirthalenin

ஆசிரியர் குழு

முனைவர் மனோன்மணி தேவி
முனைவர் ஆ.முத்தையன்
முனைவர் ச.கோபிநாத்
முனைவர் சா.யமுனாதேவி
முனைவர் ரா.பிரேம் குமார்
முனைவர் க.வெள்ளியங்கிரி
முனைவர் இரா.கோகுல்

நிறுவனர்

முனைவர் ம.சிவபாலன்

மசிவன் பதிப்பகம்
விழுப்புரம் – 605755

editor@pulamejournal.com
editor@masivanpathippagam.com
pulamejournal@gmail.com
+919486069548

## உள்ளடக்கம்

1 ஆலுக்குறும்பர் மொழியின் பதிலீடு பெயர் / Pathilidu peyar in Alukurumbar's Language
முனைவர் இர.விஸ்வநாதன் / Dr R Viswanathan 1-6

2 பதிற்றுப்பத்தில் யானை சிறப்புகள் / Elephant specialties in Pathitrupaththu
முனைவர் க. கமலா / Dr K.Kamala 7-11

3 நாட்டுப்புற மக்களின் நாட்டுப்புற மருத்துவம் / Folk medicine of folk people
வ. விண்ணொளி ராணி, முனைவர்க.கமலா / V.Vinnolirani, Dr.Kamala K 12-18

4 அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடும்பழக்கவழக்கங்களும் / Ancient Culture and Customs in Moral Literature
முனைவர் ச.ஆதிநாராயணசாமி / Dr S. Athinarayanasamy 19-25

5 சமயத் தத்துவங்கள் புனைந்தெழுப்பும் பெருங்கதையாடல்களும் அறச்சிந்தனைகளும் / Religious philosophies are fictions and myths and morals
முனைவர் ப. சின்னச்சாமி / Dr P. Chinnasamy 26-34

© Copyright to PULAM : INTERNATIONAL JOURNAL OF TAMILOLOGY STUDIES 2022 • All Rights Reserved •

# ஆலுக்குறும்பர் மொழியின் பதிலீடு பெயர்

# Pathilidu peyar in Alukurumbar's Language

**முனைவர் இர.விஸ்வநாதன்,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சேரன் கலை அறிவியல் கல்லூரி, காங்கேயம் – 630701

**Dr R Viswanathan,** Assistant Professor, Department of Tamil, Cheran College of Arts and Science, Kangayam - 630701

DOI : 10.5281/zenodo.7494274

**Abstract**

Alukurumba people live only in the Western Ghats of Nilgiri district. There are only about 1500 people of this race. Their language is on the endangered list. Linguists state that the language of these people is a dialect of Kannada. They are speaking Alukrumbar language in their house. Linguists have mentioned only a few elements about language in the absence of written case in their books. It is said that when man appeared, language also appeared. The purpose of this article is to analyze and explain the names of the victims in the language of Alukuramba.

**முன்னுரை**

நீலகிரி மாவட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் மட்டுமே ஆலுக்குறும்பர் இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இவ்வினத்தவர் ஏறக்குறைய 1500 பேர் மட்டுமே உள்ளனர். இவர்களுடைய மொழி அழிந்து வரக்கூடிய பட்டியலில் உள்ளது. இம்மக்களின் மொழி கன்னடத்தின் கிளைமொழி என்று மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். இவர்கள் தங்களுடைய வீட்டில் ஆலுக்குறும்பர் மொழியினை பேசி வருகின்றனர். எழுத்து வழக்கு இல்லாது மொழியினைப் பற்றி மொழியியல் அறிஞர்கள் சில கூறுகளை மட்டுமே தங்களுடைய நூல்களில் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனிதன் எப்பொழுது தோன்றினானோ அப்போதே மொழியும் தோன்றியது என்பர். ஆலுக்குறும்பரின் மொழியில் உள்ள பதிலிடு பெயர்களை ஆராய்ந்து விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**Keywords:** நீலகிரி, பழங்குடி, ஆலுக்குறும்பர், இலக்கணம், சொல் இலக்கணம், வினைப்பெயர்

**பதிலிடு பெயர்கள்**

ஒரு பொருளை நேரடியாகக் குறிக்கும் வகையில் அமைந்த பெயர்கள் மிகப்பலவாக எல்லா மொழிகளிலும் உள்ளன. ஆனால், நேரடியாகக் குறிக்கும் பெயராக அமையாமல் அப்பெயருக்குப் பதிலாக மாற்றாக நின்று அப்பொருளை உணர்த்துவதற்கு வழங்கும் பெயரை மொழியியலார் பதிலிடு பெயர் என்று குறிப்பிடுகின்றனர். இம்மாற்றுப் பெயர்கள் மிகச் சிலவாகவே எந்த ஒரு மொழியிலும் உள்ளன.

மூவிடப் பெயர்கள், சுட்டுப் பெயர்கள், வினாப் பெயர்கள் ஆகிய மூன்றும் பதிலிடு பெயர்கள் என்று மொழியியலாளரால் கூறப்படுகின்றன. பதிலிடு பெயர்கள் அனைத்தும் வடிவில் சிறியனவாகவும் மக்கள் நாவில் நாளும் நடமாடும் இயல்புடையனவாகவும் உள்ளன. பதிலிடு பெயர்கள் காலம்பல கடந்து நிலை பெறும் பேறு உடையன. பொதுவாக, பதிலிடு பெயர்கள் மாற்றத்திற்கு உள்ளாவதில்லை. பதிலிடு பெயர்கள் மொழியின் அடிப்படைச் சொற்களாகக் கருதப்படுகின்றன. ஒரு மொழியின் வரலாற்றில் இவை முக்கியமான இடத்தைப் பெறுகின்றன.

**பதிலிடு பெயர் வரும் இடங்கள்**

பெயருக்கோ பெயர்த் தொடருக்கோ சொற்றொடருக்கோ சொற்றொடரின் ஒரு பகுதிக்கோ பதிலாக இது வரும்.

**1. மூவிடப் பெயர்கள்**

மொழிகளின் உறவிலும் மொழியினங்களின் தொடர்பை விளக்கும் வகையிலும் மூவிடப் பெயர்கள் சிறந்து நிற்கின்றன. மூவிடப் பெயர்கள் தன்மை இடப் பெயர், முன்னிலை இடப்பெயர், படர்க்கை இடப்பெயர் என மூவகைப்படும். பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளுடன் சேரும்போது அப்பெயர்ச் சொற்களின் வடிவம் திரிவதில்லை. ஆனால் மூவிடப்பெயர்களோடு வேற்றுமை உருபுகள் சேரும்போது அப்பெயர்களின் வடிவம் திரியும். அதாவது நெடுமுதல் குறுகும். இவ்வாறு திரியும் வடிவத்தை உருபு ஏற்கத் திரிந்த பெயர் என்பர். உருபு ஏலா நிலையில் உள்ள எழுவாய் வடிவத்தை உருபு ஏற்காத பெயர் என்று மொழியியலாளர் குறிப்பிடுவர்.

மூவிடப் பெயர்களில் பாலை அறிய முடியாது. ஆனால், ஒருமை, பன்மை என்ற எண் வேறுபாட்டை அறியமுடியும். சுட்டுப்பெயரில் பால், எண் ஆகியவற்றை அறிய முடியும்.

**தன்மை**

நா (நான்)

நங்க (நாங்கள், நாம்)

இவை முறையே உருபு ஏற்கத் திரிந்த வடிவமாக

என்ன (என்)

எங்க (எங்கள்)

நங்க (நம்)

என்று மாற்றம் பெறுகின்றன.

**முன்னிலை**

நீ (நீ)

நிங்க (நீங்கள்)

இவை முறையே உருபு ஏற்கத் திரிந்த வடிவமாக

நின் (உன்)

நிங்க (உங்க)

என்று மாற்றம் பெறுகின்றன.

**படர்க்கை**

தான், தாம், தாங்கள் ஆகிய படர்க்கைப் பெயர்களுக்கு இணையான பெயர்கள் ஆ.கு மொழியில் இல்லை.

**1. சுட்டுப் பெயர்கள்**

பதிலிடு பெயர்களில் இரண்டாவது வகை சுட்டுப் பெயர்கள் ஆகும். அ, இ ஆகிய இரு உயிர்கள் சுட்டுப் பொருளில் வரும். எனவே இவற்றை சுட்டெழுத்து என்பர்.

அகரம் சேய்மையில் உள்ளதையும் இகரம் அண்மையில் உள்ளதையும் சுட்டும்.

அவா (அவன்) இதில் வா என்பதில் மூக்கொலிச் சாயல் இடம் பெறுகிறது.

அவா (அவள்) இதில் வா என்பது இடையின ஒலியாகவே அமைகின்றது.

அவரு (அவர்கள்)

அது (அது)

அஃறிணையில் வரும் பன்மையில் சுட்டுப்பெயர்கள் இல்லை. இத்தகைய சுட்டடியைக் கொண்டு பிறக்கும் பெயர்களில் எண்ணையும் பாலையும் அறிய இயலும்.

**3.வினாப்பெயர்கள்**

வினாப்பெயர்கள் சுட்டுப் பெயர்களைப் போலவே ஒருமை, பன்மை என்னும் எண் வேறுபாடும் பால் வேறுபாடும் காட்டுவன.

எவா? (எவன்?) வகரம் மூக்கொலிச் சாயலோடு ஒலிக்கப்பெறுகிறது.

எவா? (எவள்?)

ஆரா? (யார்?)

எது? (எது?)

ஏனா? (என்ன?)

**பதிலிடு பெயர்களின் வகைப்பாடு**

மூவகைப் பதிலிடு பெயர்களை அவை வழங்கும் முறை நோக்கி ஒன்பது வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள்
2. வினாப் பதிலிடு பெயர்கள்
3. வரையறை இல்லாப் பதிலிடு பெயர்கள்
4. உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்
5. பகிர்வுப் பதிலிடு பெயர்கள்
6. தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள்
7. பரிமாற்றப் பதிலிடு பெயர்கள்
8. முழுமைப் பதிலிடு பெயர்கள்
9. உடைமைப் பதிலிடு பெயர்கள்

**1.உயர்வு ஒருமைப் பதிலிடு பெயர்கள்**

அவரு (அவர், அவர்கள்)

நிங்க (நீங்கள்)

**2. வினாப் பதிலிடு பெயர்கள்**

இவை பால் காட்டாமல் எண், அளவு போன்றவற்றைக் குறிக்கும். ஏசுகு (எத்தனை, எவ்வளவு, எத்துணை)

**3. வரையறை இல்லாப் பதிலிடு பெயர்கள்**

ஒருவரை அல்லது ஒன்றை முறையே யார் என்றோ அல்லது எது என்றோ வரையறை செய்ய முடியாத நிலையில் இத்தகைய பெயர்கள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆரவோ (யாரோ)

ஆரனவோ (யாரையோ)

ஆரகோ (யாருக்கோ)

எதுனவோ (எதையோ)

ஏனனவோ (என்னவோ)

**4. உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள்**

எல்லோரையும் அல்லது எல்லாவற்றையும் உள்ளடக்கிக் கூறும் பதிலிடு பெயர்கள் உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் எனப்படும். யார், எவன், எவள், எவர், எது போன்ற வினாப் பெயர்களுடன் உம் சேர்த்து வரும்போது இத்தகைய உள்ளடக்குப் பதிலிடு பெயர்கள் உருவாகின்றன. பொதுவாக இப்பெயர்கள் அதிகமாக வருகின்றன.

ஆரவு (யாரும்)

எவனுவு (எவனும்)

எவவு (எவளும்)

ஆரவு (எவரும்)

எதுனவு (எதுவும்)

**5. பகிர்வுப் பதிலிடு பெயர்கள்**

இவை தனித்தனியாக ஒருவரை அல்லது ஒன்றனைக் குறித்து வரும் பதிலிடு பெயர்கள் ஆகும்.

ஒப்பொப்ப (ஒவ்வொருவராக)

ஒந்தொந்த (ஒவ்வொன்றாக)

ஒவ்வொந்துனவு (ஒவ்வொன்றையும்)

**6. தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள்**

ஒரு தொடரில் ஒரு செயலைச் செய்பவனும் செய்யயப்படுபவனும் ஒருவராக இருக்கும் போது, செய்யப்படுபவனைக் குறிப்பதற்குக் குறிப்பிட்ட பதிலிடு பெயர்களைப் பயன்படுத்துவது உண்டு. அப்பதிலிடு பெயர்களைத் தற்சுட்டுப் பதிலிடு பெயர்கள் என்பர். பொதுவாக செய்பவன்

எழுவாயாக வரும்போதுதான் தற்சுட்டுப் பெயர்கள் செயப்படு பொருளுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஐம்பால் காட்டும் சுட்டுப் பெயர்கள், பெயர்ச் சொற்கள் ஆகியவற்றை அடுத்து தன்னை, தம்மை, தங்களை என்பனவும் தன்மை இடப்பெயர்களை அடுத்து என்னை, எங்களை என்பனவும் முன்னிலை இடப்பெயர்களை அடுத்து உன்னை, உங்களை என்பனவும் தற்சுட்டுப் பெயர்களாக வரும்.

எ.கா

தன்னனா (தன்னை)

என்னனா (என்னை)

எங்கனா (எங்களை)

நின்னனா (உன்னை)

நிங்கனா (உங்களை)

**7. பரிமாற்றப் பதிலிடு பெயர்கள்**

இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்கள் தம்முள் பரிமாற்றம் செய்து கொண்ட செயல்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படும் பதிலிடு பெயர்கள் பரிமாற்றப் பதிலிடு பெயர்கள் எனப்படும். இது எப்போதும் பன்மையிலேயே வரும்.

தங்கவகே (தங்களுக்குள்)

ஒப்பனா ஒப்பா (ஒருவரை ஒருவர்)

ஒப்பகு ஒப்பா (ஒருவருக்கு ஒருவர்)

**8. முழுமைப் பதிலிடு பெயர்கள்**

முழுமையைக் குறித்து வரும் பதிலிடு பெயர்கள் முழுமைப் பதிலிடு பெயர்கள் எனப்படும்.

எல்லாருவு (எல்லாரும், அனைவரும்)

எல்லா (எல்லாம், அனைத்தும்)

**9. உடைமைப்பதிலிடு பெயர்கள்**

உடைமையைக் காட்டும் பதிலிடு பெயர்கள் உடைமைப் பதிலிடு பெயர்கள் எனப்படும். பல்வேறு பதிலிடு பெயர்களுடன் உடைய என்ற சொல் இணைய அதனுடன் அது, அவை, அவன், அவள், அவர் போன்ற பெயர்களை இணைக்கும் பொழுது உடைமைப் பதிலிடு பெயர்கள் உருவாகின்றன.

என்னத்து (என்னுடையது)

நின்னத்து (உன்னுடையது)

அவத்து (அவனுடையது)

நங்கத்து (நம்முடையது)

அவருத்து (அவர்களுடையது)

அவத்து (அவளுடையது)

எங்கத்து (எங்களுடையது)

நிங்கத்து (உங்களுடையது)

**முடிவுரை**

நீலகிரி வாழ் மக்களில் நீண்ட பாரம்பரியம் மற்றும் தனித்த பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ள ஆலுக்குறும்பர் மக்கள், தங்களுக்கான தகவல் பரிமாற்றத்தில் தமிழ் மொழியோடு தங்களின் இனக்குழு மொழியையும் பேசுகின்றர். மொழியியல் ஆய்வாளர்களின் கூற்றுப்படி இம்மொழியின் தன்மையானது கன்னட மொழியைச் சார்ந்திருப்பினும், அதில் காணப்படும் இலக்கணக் கூறுகளானது தமிழ் மொழியில் உள்ள இலக்கணக்கூறுகளை தனக்குள் கொண்டிருக்கிறது. மேலும் இம்மக்களின் மொழிக்கென எழுத்துருக்களை உருவாக்கி இம்மொழி சிதைந்து போகாமல் காப்பதும் மொழியியல் ஆய்வாளர்களின் கடமையாக இருக்கிறது. அந்த வகையில் ஆலுக்குறும்பர் மொழியில் காணப்படும் ஒரு பொருளை நேரடியாகக் குறிக்கும் வகையில் அமைந்த பெயர்கள் மிகப்பலவாக இம்மொழிகளிலும் காணப்படுவதை அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. அகத்தியலிங்கம்.ச, தமிழ்மொழி அமைப்பியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம். 2011.
2. கருணாகரன்.கீ, மொழியியல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. 2012.
3. நுஃமான்.எம்.ஏ, அடிப்படைத் தமிழ் இலக்கணம், அடையாளம் பதிப்பகம், திருச்சி.2007.
4. முத்துச்சண்முகம், இக்கால மொழியியல், முல்லை நிலையம், சென்னை.2005.


**Reference**


1. Agathiyalingam.S, Thamizhmozi Amaippiyal, Meyyappan Pathippagam, Chidambaram.2011.
2. Karunakaran.K, Mozhiyiyal, NCBH, Chennai.2012.
3. Numman.M.A, Adippadai Thamizh Ilakkanam. Adaiyalam Pathippagam, Trichy.2007.
4. Muthushanmugam, Ikkala Mozhiyiyal, Mullai Nilaiyam, Chennai.2005


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் இர.விஸ்வநாதன் “ ஆலுக்குறும்பர் மொழியின் பதிலீடு பெயர்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 1-6

**Cite this Article in English**

**Dr R Viswanathan “ Pathilidu peyar in Alukurumbar's Language” Pulam**: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 1-6

# பதிற்றுப்பத்தில் யானை சிறப்புகள்

# Elephant specialties in Pathitrupaththu

**முனைவர் க. கமலா**, இணைப்பேராசிரியர்,தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை-117.

**Dr K.Kamala**, Associate Professor, Tamil Department, Vels Institute of Science Technology & Advanced Studies, Pallavaram, Chennai – 117

**DOI : 10.5281/zenodo.7494285**

**Abstract**

Study Summary Although external messages such as historical significance, valor and warlikeness of the Chera kings can be seen in Padiuppam, one of the eight, the internal songs of the people who live in harmony with nature contain messages about the elephant, its valor and strength. Features such as sinam and nature are seen. In Pratiuppam, we find that the elephant is mentioned directly and metaphorically in 46 places in the hymns from the second ten to the eighth ten. The purpose of this article is to examine one of Cheran's four types of armies, the elephant. The message about the elephant is found in 46 places in Pratiuppam. War specialty. The prize consists of research on topics such as commerce.

**ஆய்வுச்சுருக்கம்**

எட்டுத்தொகையுள் ஒன்றான பதிற்றுப்பத்தில் சேரமன்னர்களின் வரலாற்று சிறப்பு, படைவன்மை, போர்த்திறமை போன்ற புறச் சார்ந்த செய்திகள் காணப்பட்டாலும், இயற்கையோடு இணைந்து வாழும் மக்களின் அகச் சார்ந்த பாடல்களில் யானைப் பற்றிய செய்திகளில் அதன் வீரம், வலிமை. சினம், இயல்பு போன்ற சிறப்புகள் காணப்படுகிறது. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்திலிருந்து எட்டாம் பத்துவரையிலுள்ள பாடல்களில் 46 இடங்களில் யானையை நேரிடையாகவும், உவமைப்படுத்தியும் கூறப்பட்டுள்ளதைக் காணலாம். சேரனின் நால்வகைப் படைகளுள் ஒன்றான யானையைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். பதிற்றுப்பத்தில் 46 இடங்களில் காணப்படும் யானையையு பற்றியச் செய்தியினை இயல்பு. போர்ச் சிறப்பு. பரிசில், வாணிகம் போன்ற தலைப்புகளில் ஆய்வாக அமைகிறது.

**Keywords:** யானை, சங்க இலக்கியம், பத்துப்பாட்டு, பதிற்றுப் பத்து, குறிஞ்சி, காடு, இயற்கை

**முன்னுரை**

யானையின் இயல்பானது மலைப் பாங்கான இடங்களிலும், அடர்ந்த காடுகளிலும், யானைகள் மிகுதியாக வாழும், தம் கூட்டத்தோடு செல்லும் இயல்புடையது மலையைப் போல் பெரிய உடலை உடையது. சிறிய கண்களையும் அவ்வப்போது மதநீரை ஒழுக்கும் முறம் போன்ற காதுகளையும், பருத்த கால்கள். நீண்ட துதிக்கையும். வெண்மையான கொம்புகளை உடைய யானையின் தோற்ற இயல்பினைப் பதிற்றுப் பத்துப் பாடலில் பல இடங்களில் பதிவுச் செய்யப்பட்டுள்ளது.

**உருவம்**

பெரிய மலையைக கண்டாற் போன்று பருத்த உடலையுடைய யானையை "மலையுறழ் யானை (69-1) என்றும், பெருமலை யானையொடு (32-11) என்று கபிலரும், காப்பியாற்றுக் காப்பியனாரும் யானையின் தோற்றத்தைப் பதிற்றுப் பத்துப் பாடலில் வழியே வெளிப்படுத்துகின்றார்கள்.

பரிய பெரிய துதிக்கையும், சிறிய பசிய கண்களையுடைய பானைகள் என்பதை பைங்கண் யானைப் புணர் நிரைதுமிய (28. -5) என்ற வரியில் நிரை என்பது வரிசையைக் குறிக்கும் சொல்லாகும். கானைகள் தன் இனத்தோடு கூட்டமாகச் செல்லும் இயல்பினை டையது என்பதை அறியலாம்.

**தந்தம்**

சேரனின் படைகளில் வெள்ளிப் போன்று ஒளி வீசும் கொம்புகளைக் கொண்ட ஆண்யானைகள் மிகுந்து இருப்பதையும் அம் மருப்புகள், உயர்ந்தும், உடைந்தும் நுனி முரிந்தும் காணப்படுவதைப் பதிற்றுப்பத்துப் பாடல்களில் ஆறு இடங்களில் ஆசிரியர் மருப்பு பற்றிய செய்தியினைப் பதிவுச் செய்துள்ளதை அறியலாம்

போருக்குச் செல்லும் யானைகள் பேராற்றல் மிகுந்தவையாக இருக்கும் மதம் மிகுந்த கோபம் கொண்ட யானைகள் உயர்ந்தக் கொம்புகளைக் கொண்டவை என்பதை வலனுயர் மருப்பிற் பழிதீர் யானை (11.18) என்கிறார் பாலைக் கௌதமனார்

யானையின் வெண்மையானக் கொம்புகளானது பகைவரின் மதிலை மோதி அழித்ததினால் பெரிய ஆண் யானையின் கொம்புகளின் நுனியானது முரிந்த நிலையில் பாதி தந்தங்களாக காட்சித்தரும் யானை தொடி சிதை மருப்பின் யானை (15,22) என்றும் முத்துகள் பிறக்கின்ற இடங்கள் பலவாகக் காணப்பட்டாலும் யானையிடம் உள்ள முதிர்ந்த வலிமையானத் தந்தங்களே மதிப்பு மிக்கதாகக் காணப்படும் என்ற செய்தியினை. இருங்களிற்று யானை இலங்குவாள் மருப்பொடு (35,3) என்று பதிற்றுப்பத்தில் நீண்ட வெண்மையானத் தந்தங்களைக் கொண்ட ஆண் யானைகள் போரில் ஆற்றலுடன் செயல்பட்டதால் தந்தமானது முரிந்து காணப்படும் யானையின் தோற்ற இயல்பினை அறிய முடிகிறது.

**கால்கள்:**

உரலைப் போன்ற பெருத்த காலகளையும். அழகிய தந்தங்கள். நீண்ட துதிக்கைக் கொண்ட மதத்தையுடைய யானையினை உரல்போல் பெருங்கால் இலங்குவாள் மருப்பின் பெருங்கை மதமாப் புகுதரின் (43.3-5) என்று யானையின் புறத் தோற்றத்தினை இவ்வடிகள் மூலம் அறியப்படுகின்றது.

**இயல்பு:**

ஒருவரின் புற அழகு பிறரை ஈர்க்க வல்லது போல யானையின் புறத் தோற்றத்தைப் பாகர்களால் ஒப்பனை செய்யப்பட்ட யானையின் நெற்றியில் முகபடாமும், பொன்னால் செய்த

மாலை அணிந்த வலிமையான மதம் மிக்க யானையின் கழுத்தில் கட்டப்பட்ட மணியானது ஒலிக்கும் படி நிமிர்ந்து நடக்கும் ஆண்யானைகள் கூட்டமாகவும், வரிசையாகவும் போருக்குச் செல்லும் இயல்பினை பல்களிற்றுத் தொழுதியொடு பலவாகிய யானைக் கூட்டங்களோடு (4,16) என்று பாலைக் கௌதமனாரும். நிரைகளிறு ஒழுகிய நிரைய வெள்ளம் (15.4) என வரும் அடிகளில் களிறுகள் தொகுதியாகச் செல்லும் இயல்பாவதால் நிரைகளிறு என்றும் அவை போர்க்களம் முழுவறும் நிறைந்திருப்பதை நிரைகளிறொழுதிய வெள்ளம் என்று குறிப்பிடுகிறார்

சேரலாதனின் படையில் நீண்டக் கொம்புகளைக் கொண்ட போர் சிறப்பு: வலிமைப் பொருந்திய யானைகளே மிகுதியாகக் காணப்படுகின்றது யானைகள் வலிமையுடனும் சினத்தோடும் நான்கு திசைகளிலும் விரைந்து சென்று பகைவர்களை அழிக்கும் ஆற்றல் யானைகளானது. நெற்றியில் புள்ளிகள் நிறைந்த முகத்தில் பொன்னா செய்யபப்பட்ட முகபடாம் என்ற அணிகலன்களையும், பொன்ன◌ மாலையும் அணிந்த ஆண்யானைகள் வலிமை, ஆற்றலுடையன என்பதை ஓடை விளங்கும் உருகெழு புகர்நுதல் பொன்னணி யாளை (34,6-7) என்ற பாடல் உணர்த்துகிறது.

ஆண்யானைகளின் முகத்தில் இருபக்கங்களிலும் அழகா நீண்ட வலிமையானத் தந்தங்கள் கம்பீரமானத் தோற்றத்திற்கு அடையாளமாகக் காணப்படுகின்றது. அக்கொம்புகளால் பகைவா நாட்டு மதிற் கதவுகளை மோதி அழித்ததால் தந்தத்தின் இரு முனைகளும் சிதைந்து காணப்படும் என்பதை தொடி சிதை மருப்பின் (15.22) யானைகள் ஆற்றலுடன் போரிடுவதை உணரலாம்.

யானையைச் செலுத்துபவர் பாகன் எனப்பட்டனர் யானைகளைக் கட்டுப்படுத்த அங்குசம். தற்றுக்கோல், குத்துக்கோல் போன்ற கருவிகளைப் பயன்படுத்தினர் பாகனால் நல்லொழுக்கம் பயிற்றுவிக்கப்பட்ட யானைகளின் தந்தத்தின் இரு முனைகளிலும் பூனல் அழகுச் செய்யப்பட்டு போருக்குச் சென்றதை. தோட்டி நீவாது தொடி சேர்பு (40.27) என்றும்

தோட்டி தந்த தொடி மருப்பு யானை (38.6) என்ற இருபாடல் வரிகளிலும் போரில் ஆண்யானைகள் பாகனின் கட்டளைக்கு கட்டுப்பட்டு ஆற்றலோடு செயல்பட்ட ஆண்யானைகளே மிகுதியாக காணப்படுவதை அறியலாம்.

போரில் சிறந்தவையாக விளங்கும் யானைகள் பகைவர்களைக் கொல்லும் வெற்றிக் கொண்டது என போர்களை எதிர்நின்று வெற்றிக் கொண்டது என "பல செருக்கடந்த கொல் களிற்று யானை (46.10) கொல் களிற்று உரவுத் திறை பிறழ (50.8) எனப் பரணரும். கொல்களிறு அடைந்த பல்தோல் தொழுதியொடு (83.3) எனவரும் பாடல்களில் யானைகள் வலிமையானதாகவும் கூடமாகச் சென்று பகைவர்களை அழிக்கும் ஆற்றல் மிக்கன் என் யானையின் கூட்டத்தை மூன்று இடங்களில் உணர்த்தபடுகிறது. யானைகள் நிலத்தில் வேகமாகச் செல்லும் போது அதிர்வை ஏற்படுத்தும் வகையில் விரைந்து ஓடும் அவற்றினை கடாஅம் சென்னிய கருங்கண்யானை (25.3-4) என்ற பாடலில் பகைவருடன் பேரிடும் தன்மையுடைய ஆண் யானைகளை பயன்படுத்தியதைப பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பரிசில் யானை:**

சங்க காலத்தில் மன்னர்கள் கொடைத் தன்மை மிக்கவர்களாக இருந்தனர். வளம் இன்மையால் துயருற்று களைத்து தன்னை நாடி வரும் புலவர் பாணர், கூத்தர் போன்ற இரவலனின் மனம் மகிழும்படி களிறும், குதிரையும், தேரினோடு பலவகைப் பொன்னும் பொருளும் பரிசிலாக வழங்கினான் என்பதை புலவர் ஏத்தவோங்கு புகழ் நீறிக் விரிவுள் மாவுங் களிறும் தேரும் கடமினைக் குண்டு கிடங்கின்" (20, 14-17) என்ற வரிகளில் பலயானை செல்கெழு குட்டுவன் பல பொருளோடு யானையும் பரிசிலாக வழங்கியதையும் தொன்றுதிறை தந்த களிற்றோடு நெல்லின் அம்பண் அளவை" (66, 7-8) என கபிலர், இரவலனைத் தன்னுடன் தங்க வைத்து இன்முகத்தோடு வரவேற்று சிறந்த உணவினை அளித்து உபசரித்ததோடு வறுமையில்லாமல் வாழ்வதற்காக நன்கு முற்றிய நெற்கதிரை அறுத்து உமியை நீக்கி சுத்தம் செய்த நெல்லை அம்பண் என்ற அளவையால் அளந்துக் கொடுத்ததோடு திறையாக வந்த யானையையும் பரிசிலாக வாரி வழங்கியதையும் பதிவுச் செய்யப்பட்டுள்ளது. பெருங்களிற்று யானையோடு அருங்கலம் தரா அர் (71:21) என்று அரிசில் கிழாரும்.

களிறொடு கலம் தந்து (90.6) என பெருங்குன்றூர் கிழாரும். மன்னர்கள் அரசவையில் மட்டுமல்லாது போர்களத்தில் தன்னையும். படைவீரர்களை கூத்து நடனத்தின் மூலம் மகிழ்விக்கின்ற கூத்தருக்குப் பகைவரிடமிருந்து பெற்ற பல வகையான உயர்ந்த அணிகலன்களோடு பருத்த உடலை உடைய ஆண் யானைகளைப் பரிசாக வழங்கினான் என்பதைக் காட்டப்படுகின்றது. மன்னன் பகையரசரிடம் இருந்து வென்ற யானைகளை இரவனுக்கும் புலவருக்கும் வழங்கியதை ஆடுதோறும் பெற்ற பரிசிலர் கிளிறே (47-21) என்ற வரிகளும் துடியடிக் குழவிய பிடியிடை மிடைந்த வேழமுகவை நல்குமதி (புறநா-369, 26-7) என்ற வரிகளும் உணர்த்துகிறது.

தம் இனிமையான யாழிசையால் பாடியும் ஆடியும் மகிழ்விக்கும் விறலியருக்கு பெண் யானைகளை பரிசிலாக கொடுத்தான் என்பதைப் பாடுவிறலியார் பல்பிடி பெறுக எனக் கூறுவதிலிருந்து கன்றுகளை176 ஈன்றெடுக்கும் பெண்யானையை தன்னிடம் வைக்காது வாரி வாரி கொடுத்த ஈகைப் பண்பு புலனாகிறது.

**வாணிகம் - யானை:**

நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியத் தொழிலாக வணிகம் காணப்படுகிறது. சங்ககாலத்தில் மக்கள் பண்டமாற்று முறை என்ற வாணிகத்தை மேற்கொண்டனா என்பதை மூன்றாம் பத்தில் முப்பதாவது பாடல் உணர்த்துகிறது பாலை நிலத்தில் காந்தாள் மலரைச் சூடியும், வேட்டையாடுவதற்காக வில்லினை வைத்திருக்கும் வேட்டுவர்கள் காட்டில் வாழும் வலிமையுள்ள யானையின் நீண்ட வெண்மையான தந்தங்களை. பெரும் செல்வத்தையுடைய மக்கள் வாழும் கடைத் தெருவிற்கு எடுத்துச் செலவர் அங்கு யானையின் தந்தங்களைக் கொடுத்து தமக்கு வேண்டிய பொருளைப் பெறுவர் என்பதை மதனுடைய வேழத்து வெண்கோடு கொண்டு பொன்னுடைய நியமித்துப் பிழி தொடை கொடுக்கும் (30. 11-12) என்று உணர்த்துகின்ற

செய்தியானது "பிழி" என்பது 'கள்'ளையும். தொடை என்பது விலையைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வேட்டுவர்கள் கள்ளிற்கு விலையாக மதமுடைய யானையின் தந்தங்களைப் பண்டமாற்றுக்குப் பயன்படுத்தினார்கள் என்பதையும் பதிற்றுப்பத்தில் அறுபத்தெட்டாம். பாடலில் பட்டத்து யானையின் நீண்டதும், வலிமையான, வெண்மை நிறமுடையத் தந்தங்களை பறித்தப் படைவீரர்கள் அரிய வகையைச் சார்ந்த "அரியல்' என்ற புளிப்பு மிக்க கள்ளினைப் பெறுவதற்காக யானையின் தந்தங்களை விலையாகக் கொடுத்து கள்ளை வாங்குவர் என்ற செய்தியினை. "யானை வெண்கோடு கொண்டு, கள்கொடி நுடங்கும் ஆவணம் புக்கு உடன் அருங் 'கள்' நொடையை தீர்ந்த பின் (68, 9-11) என்று கபிலர் கூறுவதிலிருந்து அக்காலத்தில் பண்டமாற்று முறை என்ற வாணிகம் முறை வழக்கத்தில் இருந்திருப்பதை இருபாடல்களும் உணர்த்துகிறது.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் க. கமலா “ பதிற்றுப்பத்தில் யானை சிறப்புகள்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 7-11

**Cite this Article in English**

**Dr K.Kamala “ Elephant specialties in Pathitrupaththu” Pulam**: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 7-11

# நாட்டுப்புற மக்களின் நாட்டுப்புற மருத்துவம்

# Folk medicine of folk people

**வ. விண்ணொளி ராணி,** ஆய்வு மாணவி, தமிழ்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை-117.

**முனைவர் க.கமலா,** இணைப்பேராசிரியர், தமிழ்துறை, வேல்ஸ்அறிவியல் தொழில் நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை-117.

**V.Vinnolirani**, Research Scholar, Tamil Department, Vels Institute of Science Technology & Advanced Studies, Pallavaram, Chennai – 117

**Dr K.Kamala**, Associate Professor, Tamil Department, Vels Institute of Science Technology & Advanced Studies, Pallavaram, Chennai – 117

**DOI : 10.5281/zenodo.7494293**

## Abstract

Folklore is a growing field in Tamil Nadu. Folk literature consists of four major categories namely folk customs, folk arts, folk science and technology. Folk medicine is a subdivision of folk science. Traditional medicine is a method of medicine that came through human knowledge. Local people use the things that we use daily at home like suku, pepper, tippili, cumin, coriander, turmeric powder, etc. as medicine. Also, some villagers collect the roots, bark, seeds, nuts and green leaves from the forest and fields and prepare it as medicine and give it to the people to cure the disease. Rural people are benefiting from this medicine through their traditional origins, hearsay and circumstance.

## ஆய்வுச்சுருக்கம்

நாட்டுப்புறவியல் என்பது தமிழ்த்துறையில் வளர்ந்து வரும் ஒரு மிகப்பெரிய துறையாக உள்ளது. நாட்டுப்புற இலக்கியம் என்பது நாட்டுப்புறப் பழக்கவழக்கங்கள், நாட்டுப்புறக் கலைகள், நாட்டுப்புற அறிவியல், தொழில் நுட்பம் என்னும் நான்கு பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. நாட்டுப்புற மருத்துவம் என்பது நாட்டுப்புற அறிவியலின் ஒரு உட்பிரிவாக உள்ளது. நாட்டு மருத்துவம் என்பது மனிதனின் பட்டறிவு வாயிலாக வந்த மருத்துவ முறையாக விளங்குகிறது. வீட்டில் நாம் தினந்தோறும் பயன்படுத்தும் பொருட்களான சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், கொத்தமல்லி, மஞ்சள்தூள், போன்ற பொருள்களையே நாட்டுப்புற மக்கள் மருந்தாக பயன்படுத்துகின்றனர். மேலும் சில கிராமத்து மக்கள் காடு மற்றும் வயல்வெளிகளில் உள்ள வேர்கள், பட்டைகள், விதைகள், கொட்டைகள், பச்சிலைகள் ஆகியவற்றை ஒன்று திரட்டி அதனை மருந்தாக தயாரித்து மக்களுக்கு கொடுத்து நோயை குணப்படுத்துகின்றனர். கிராமப்புற மக்கள் தங்களின் மரபுவழித் தோன்றலின் வழியாகவும், செவிப்புலன் வழிச்செய்தியாகவும், சூழ்நிலையாலும் இம்மருத்துவத்தில் நம்பிக்கைவைத்து பயனடைந்து வருகின்றனர்.

**Keywords :** நாட்டுப்புற மருத்துவம், இயற்கை மருத்துவம், நாட்டுப்புறவியல், மக்கள் வாழ்வியல், மக்கள் மருத்துவம்

**முன்னுரை**

தமிழ் மருத்துவ முறையை சித்த மருத்துவ முறை என்றும் கூறுவர். மூவகை சித்திகளான கர்ம சித்தி, யோக சித்தி, ஞான சித்திகளைப் பெற்றவர்களை சித்தர்கள் என்பர் .**"முக்தி உலகத்துக்கு தத்துவ நூல்கள் கூறும் தெய்வீக ஆற்றலால் தூண்டப்பட்டு, தம் ஞானத்தினால் அறிந்து மனித வாழ்வுக்கு வழிவகுத்துக் கொடுத்தவர்கள் சித்தர்கள். மனிதன் என்று தோன்றினானோ அன்றே நோயும் உடன் தோன்றியது என்பர். சித்த மருத்துவமுறை தோன்றிய காலத்தை வரையறுத்துக் கூறுவது என்பது மிகக் கடினம். ஆகையால் காலம் கடந்த ஒரு அபூர்வ சிகிச்சை முறை சித்த மருத்துவ முறையாகும். இதை பூரண சாத்திரம் என்று அறிஞர் கூறுவர்."(முனைவர் ந.கடிகாசலம், தமிழும் பிறத் துறைகளும், ப. 110)**

சித்த வைத்திய சிரோண்மணி என்ற பட்டம் பெற்ற டாக்டர் துர்க்காதாஸ், எஸ்.கே. சுவாமி என்பவர்கள் உலகில் நாட்டு வைத்தியம் என்பது சித்த வைத்தியம், ஆயுர்வேத வைத்தியம், யுனானி வைத்தியம், அலோபதி வைத்தியம், ஹோமியோபதி வைத்தியம் என்னும் ஆறு வைத்திய முறைகளில் பயன்பட்டு வருகின்றன என்பார்கள். **"அவற்றுள் மிகவும் தொன்மை வாய்ந்தது சித்த வைத்தியமாகும். மற்ற வைத்திய முறைகளை அவை எப்போது தோன்றியது என்று வரையறுத்துக் கூற முடியும். ஆனால் சித்த வைத்திய முறையை மட்டும் எப்போது தோன்றியது என்று கூற இயலாது. இது தமிழ்நாட்டில் வாழ்ந்த சித்த பெருமக்களால் உருவானது. அது பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ள வைத்தியமாகும்".( டா. துர்க்காதாஸ், இரத்தக்கொதிப்புச் சித்த வைத்தியம், ப. 60)**என்பர்.

சித்த மருத்துவ முறையும், ஆயுர்வேத மருத்துவ முறையும் இமயம் முதல் குமரி வரையிலுள்ள மக்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சித்த மருத்துவ முறையை தமிழ் மருத்துவம் என்றும் கூறுகிறார்கள்.

மேலும் **"உலகில் காணப்படும் மருத்துவ முறைகள் அனைத்திற்கும் முன்னோடியாக சித்த மருத்துவம் திகழ்கிறது. எனவே சித்த மருத்துவம் தாய் மருத்துவம் என்று போற்றப்படுகிறது. சித்த மருத்துவ நூல்கள் தமிழில் மட்டுமே அதிகமாகக் காணக்கிடைப்பதாலும், சித்த மருத்துவ முறை பண்டை நாள் முதல் இன்றுவரை தமிழ்நாட்டிலேயே பயிலப்பட்டு வருவதாலும் சித்த மருத்துவத்தை தமிழ் மருத்துவம் என்பர்".( கலைக்களஞ்சியம், தொகுதி 4, ப. 642)**

**நாட்டு மருந்தின் இலக்கணம்:**

நோய்களைக் குணப்படுத்தும் மருந்தைப் பற்றி குறிப்பிடும்போது திருவள்ளுவர் மருந்தின் இலக்கணமாக மருந்தானது உடலை காப்பதாக இருக்க வேண்டும் என்பதை,

**"மருந்தோமற்று ஊனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை**
**பீடு அறிய வந்த இடத்து" (திருக்குறள், 968)**

என்ற குறளிலும், மருந்தானது மிக்க துன்பத்தை நீக்கி பலன் அளிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும் என்பதை,

**"செறிதொடி செய்த இறந்த காலம் உறுதுயர்**

**தீர்க்கும் மருந்தொன்றுஉடைத்து" (திருக்குறள், 1275)**

என்ற குறளிலும் விளக்கியுள்ளார். தமிழ் சித்தராகிய திருமூலர் திருமந்திரத்தில்,

**"மறுப்பது உடல்நோய் மருந்தெனவாகும்**

**மறுப்பத உளநோய் மருந்தெனவாகும்**

**மறுப்பது இனிநோய் வாராதிருக்க**

**மறுப்பது சாவை மருந்தெனலாமே"( கீ.ஆ.பெ. விசுவநாதம், தமிழ் மருந்துகள், ப. 3)**

என்று குறிப்பிட்டுள்ளார். எனவே மருந்தின் நான்குவித செயல்களை நோக்கும்போது மருந்தானது உடல்நோய், உள்ளநோய் தீர்ப்பதாகவும், மறுபடியும் நோய்வராமல் தடுப்பதாகவும் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

**தமிழ் இலக்கியங்களில் நாட்டுப்புற மருத்துவம்:**

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் மருத்துவம் செய்வதை அறமாக மேற்கொண்டுள்ளார்கள். பதினெண்கீழ்கணக்கு நூல்களில் உள்ள சில நூல்களின்பெயர்கள் மருத்துவ மூலிகைகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. பண்டையகால கல்வெட்டுகள், செப்பேடுகள், மருத்துவத்தின் வளர்ச்சியை எடுத்துக்கூறுவதாக அமைந்துள்ளது. சிற்றிலக்கியங்கள் பல நாட்டு மருத்துவ செய்திகளை நாட்டுப்புற இலக்கியங்கள் வாயிலாக எடுத்தியம்புகிறது. மருத்துவம் பற்றிய அடிப்படைக் கருத்துக்களைத் தொகுத்துத் தருவதில் உலக பொதுமறையாகிய திருக்குறள் முதலிடத்தைப் பெறுகிறது.

**நாட்டு மருத்துவத்தின் சிறப்புகள்:**

நவீன மருத்துவத்துறையில் விஞ்ஞான வளர்ச்சிதான் முதன்மையானதாகக் காணப்படுகிறது. ஆனால் நாட்டு மருத்துவத்தில் விஞ்ஞானமும், மெய்ஞ்ஞானமும் இணைக்கப்பட்டுள்ளது. **"சித்தர்கள் இயற்கையில் நிகழும் சில நிகழ்ச்சிகளைப் பெற்று சில கோட்பாடுகளை நிறுவினர் என்பர். நவீன அறிவியல் அறிஞர்கள் ஒரு கோட்பாட்டை அல்லது ஒரு வரையறையை எடுத்துக் கொண்டு அதற்கான சோதனைகள் செய்து முடிவில் நிகழ்ச்சிகளைப் பெற்று உண்மை என்பதை உறுதி செய்கின்றனர். சான்றாக மெய்ஞ்ஞானம் என்பது லென்சில் சூரிய ஒளியைத் திரட்டி ஒரு புள்ளியாக்குவது போன்றது. விஞ்ஞானம் என்பது சூரிய ஒளியில் இருந்து கதிர்கள் விரிந்து செல்வதைப் போன்றது. இதன்மூலம் விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது என்பது புலப்படுகிறது"( டாக். அரசு, சித்தர்களும், நோய் தீர்க்கும் சித்த மருத்துவமும், ப.30).** இதன் அடிப்படையில் தான் நாட்டு மருத்துவம் பல சிறப்பு அம்சங்களை தன்னகத்தே கொண்டு மிகப்பெரிய வளர்ச்சியினை பெற்றுள்ளது.

**நாட்டு மருந்துகளின் வகைகள்:**

நாட்டு மருத்துவர்கள் மருந்தை அகமருந்து, புறமருந்து என இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர். இதில் அகமருந்து முப்பத்திரெண்டு, புறமருந்து முப்பத்திரெண்டு எனவும் கண்டுபிடித்துள்ளனர்.

அகமருந்துகள் தயாரிக்கப்படும்போது கருக்கல், அரைத்தல், கசக்குதல், கலக்குதல், வறுத்தல், கழற்றுதல், உருக்குதல், இறுத்தல், உலர்த்தல், உரைத்தல், குழப்புதல், உருட்டுதல், நசுக்குதல் பொசுக்குதல், நனைத்தல், எரித்தல், வழித்தல், இறுக்குதல், இழைத்தல், குழைத்தல், எடுத்தல் போன்ற இருபத்திநான்கு செயல்முறைகளில் தயாரிக்கப்படுகின்றது.

புற மருந்துகள் கட்டுதல், பற்று, ஒற்றடம், பூச்சு, வேது, பொட்டணம், புகை, மை, பொடி, நிமிர்த்தல், கலிக்கம், நசியம், ஊதல், நாசிகாபரணம், சீலை, நீர், வர்த்தி, அட்டிகை, சலாகை, பசை, களி, பொடி, முறிச்சல், கீறல், அட்டை விடல், அறுவை, கொம்பு கட்டல், உறிஞ்சல், குருதி வாங்கல், பீச்சு போன்ற வகைகளில் வகைப்படுத்துவர்.( **மு. பசுமலையரசு, செந்தமிழும், சித்த மருத்துவமும், ப. 44)**

**மருந்துகள் பயன்படுத்தும் முறைகள்:**

நாட்டுமருந்துகள் பயன்படுத்தும் முறை ஆங்கில மருத்துவ முறையிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒன்றாகும். நாட்டுமருத்துவத்தில் மருந்துகள் கசாயம், மாத்திரை, சூரணம், தைலம், எண்ணெய், குழம்பு என்ற முறையில் தயாரிக்கப்பட்டு ஒரு நோய்க்கு ஒரு மருந்து, ஒரு நோய்க்கு பல மருந்து, பல நோய்க்கு ஒரு மருந்து என்ற முறையிலும், நோயைக் கூறி நோய்க்கு மருந்து கூறல் என்ற முறையிலும், மருந்து தயாரிக்கின்றனர்.

அதன் அடிப்படையில் நாட்டு மருந்தினால் குணமாகும் பல நோய்களைக் கூறுதல் என்ற முறையில் நாட்டு மருத்துவத்தில் மருந்துகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒரு நோயிக்கு பல மருந்துகள் கூறப்படுவது நாட்டுமருத்துவத்தின் சிறப்பு கூறாகும். ஒரு மருந்து பல நோய்களைக் குணப்படுத்தும் தன்மையும் உடையது.

**உடற்பயிற்சி :**

நாட்டுமருத்துவத்தில் உடற்பயிற்சிமிக முக்கியமான ஒன்றாகும். ஒரு பொருளை பயன்படுத்தாவிட்டால் எவ்வாறு அது துருப்பிடித்து பயன் இல்லாமல் போகின்றதோ, அதுபோல மனித உடலில் பயிற்சி இல்லாத உறுப்புகளும் சிறுக சிறுகச் சக்தியை இழந்து பயனில்லாமல் போய்விடும்.

பழங்காலத்தில் **"மனிதன் தான் பின்பற்றவேண்டிய நெறிமுறைகள், ஒழுக்கங்கள், உடல் ஓம்பல், உடலின் சக்தியைச் சிதறவிடாமல் ஒன்று சேர்த்து பயன்படுத்துதல், உடலின் ஒவ்வொரு இயக்கம் மற்றும் மனதின் செயல்கள், உள்மனதின் விழிப்பு நிலையை மேம்படுத்துதல், மூளையின் ஆற்றலை முறையாக பயன்படுத்துதல் போன்ற ஒவ்வொரு வகையிலும் தன்னை உணர்ந்து, தன்னுள் அடங்கியுள்ள சக்தியினைப் பயன்படுத்தும் உயர்நெறிகளை, உயிரின் ஆற்றலை**

**பயன்படுத்திக் கொண்டான்".( டாக்டர். சிற்சபை,சித்த முறையில் நோய் வராது காக்கும் வழி,ப. 371)**

ஆனால் இக்காலத்து மக்கள் சிறு வேலைகளுக்குக் கூட கருவியின் உதவியை நம்பி காலங்கழித்துக் கொண்டிருக்கின்றனர். அக்காலத்தில் பெண்கள் மாவு அரைத்தல், மசாலா அரைத்தல், துணி துவைத்தல், நெல் குற்றுதல், அறுவடை செய்தல் போன்ற பல வேலைகளை தாங்களே தங்கள் கைகளால் செய்தனர். ஆனால் இக்காலத்தில் எல்லா வேலைகளுக்குமே இயந்திரங்களை பயன்படுத்தி தங்கள் வேலைகளை முடித்துவிடுகின்றனர்.

இதனால் அதிக ஆற்றலும் திறமையும் படைத்த மக்கள் உடல்நலம் குன்றி அதிக நோய்க்கு ஆளாகின்றனர். இதனால் எதற்கெடுத்தாலும் மருந்து, ஊசி, மாத்திரை என்று தன் உடலை கெடுத்துக் கொள்கிறார்கள். எனவே முடிந்த அளவு வீட்டு வேலைகளை தானே செய்து கொண்டு சிறு சிறு உடற்பயிற்சிகளின் மூலம் நோயின்றி ஆரோக்கியமாக உயிர் வாழ முடியும்

**மருந்தில்லா மருத்துவ முறைகள்**:

- அதிகாலை துயிலெழுதல் வேண்டும்
- காலையில் எழுந்தவுடன் மலம், ஜலம் கழிக்க வேண்டும்
- உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்
- நன்றாக உடற்பயிற்சி செய்ய வேண்டும்
- எண்ணெய் தேய்த்து குளிக்க வேண்டும்
- சுத்தமான காற்றை சுவாசிக்க வேண்டும்
- பசிக்கும் முன் உணவு உண்ணக்கூடாது
- அதிக அளவு கோபப்படவோ, கவலைப்படவோ கூடாது
- வாழ்க்கையில்நடப்பது நன்மையோ, தீமையோ எது நடந்தாலும் அதிக மகிழ்ச்சியோ, கவலையோ கொள்ளக்கூடாது.
- பொறுமை, உண்மை, அறிவு, தெய்வபக்தி, அமைதி, அடக்கம் இவை அனைத்தும் மனிதனின் ஆயுள் பண்புகளாகும்.

இவற்றையெல்லாம் கடைபிடித்து வாழ்வது நமது கடமையாகும்.

**நாட்டுப்புற மருத்துவத்தில் நம்பிக்கைகள்:**

மருத்துவத்தில் நோய் குணமாவதற்கு மருந்தும் மருத்துவமும் முதன்மையாக இருப்பதைப்போன்று நோயாளியின் நம்பிக்கையும் முதன்மையான ஒன்றாகும். நாட்டுப்புற மருத்துவத்தில் மூலிகையும் மருத்துவர் பாதி நோயைக் குணப்படுத்தினால் நோய் குணமாகி விடும் என்று நோயாளி நம்பும் நம்பிக்கையே மீதியைக் குணமாக்கிவிடும்.

நாட்டுப்புற மக்கள் மருத்துவரை விட இறைவனை அதிகமாக நம்புகின்றனர். பண்டை காலத்தில் இருந்தே இந்திய மருத்துவ முறைகளில் நம்பிக்கை மருத்துவம் இடம் பெற்று வருகின்றது. நோய்களைத் தீர்ப்பதற்குப் பெரும்பாலும் மந்திர வழிபாடுகளும், தாயத்துகளும்

பயன்படுகின்றன. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் வெறியாட்டு, ஓரைபார்த்தல் போன்ற நம்பிக்கைகளைப் பற்றிய குறிப்புகள் கூறப்பட்டுள்ளன.

நாட்டு மருத்துவத்தில் கிராமத்தில் வாழுகின்ற மக்கள் அதிக நம்பிக்கை உடையவர்களாக காணப்படுகிறார்கள். கண்ணேறு கழித்தல், சீர்பார்த்தல், கொதிக்குட்பார்த்தல் குடலேற்றம்தட்டுதல், வர்மப்பிடி தடவுதல் போன்றவை கிராமப்புற மக்களின் நம்பிக்கையாக உள்ளது.

**முடிவுரை**:

பல ஆண்டுகளுக்கு முன்பே பழங்குடி வாழ்க்கை வாழ்ந்த மனிதன் நோயினால் துன்புற்றபோது தாம் வாழும் வாழ்க்கைச் சூழலில் கிடைக்கும் தாவரப்பொருள்களைக் கொண்டு தன் நோயைப்போக்கி கொண்டான். தன்னைச் சுற்றி வாழ்ந்த விலங்குகளிடமிருந்தும், பறவைகளிடமிருந்தும் மூலிகைகள், மருத்துவமுறைகள் ஆகியவற்றை அறிந்துகொண்டான்.

திருக்குறளில் உள்ள **'மருந்து'** என்னும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகள் அனைத்தும் இன்றும் உலகளாவிய மருத்துவ முறைகளாக அமைந்துள்ளன. மூலிகை வைத்தியம், இரகசிய மருந்து வைத்தியம், இயற்கை வைத்தியம், வீட்டு வைத்தியம், பரம்பரை வைத்தியம், பச்சிலை வைத்தியம் ஆகியவை இன்றளவும் நாட்டு மருத்துவத்தின் சிறப்புகளை விளக்குவனவாகவே அமைந்துள்ளன .

நாட்டுப்புற மருத்துவத்தில் மூலிகையும் மருத்துவரும் பாதி நோயைக் குணப்படுத்தினால் 'நோய் குணமாகி விடும்' என்று நம்பும் நோயாளியின் நம்பிக்கையே மீதி நோயை குணமாக்கி விடுகிறது. இறைவழிபாடு, மந்திரம் ஆகியவை சார்ந்த நம்பிக்கைகள் மருந்தாக அமைந்து மக்களின் நோயை குணமாக்குகிறது. மக்களிடையே நிலவும் நம்பிக்கைகள் வெறும் மூடநம்பிக்கைகளாக மட்டும் இல்லை. பலவித நோய்களை குணப்படுத்தும் அறிவியல் அடிப்படைகளும் அவற்றில் பொதிந்துள்ளன.

ஆங்கில மருத்துவத்தில் ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள் தனியாக இருப்பதைப் போன்று நாட்டுப்புற மருத்துவத்தில் இல்லை. ஆனால் எலும்பு முறிவு, மஞ்சள் காமாலை, சரும வியாதிகள் ஆகியவற்றிற்கு மருத்துவம் பார்க்கும் மருத்துவர்கள் நாட்டுப்புற மருத்துவத்தில் இன்றளவும் சிறப்பு பெற்றவர்களாகவே உள்ளனர்.

எனவே எதிர்காலத்தில் நாட்டு மருத்துவத்தை நவீனப்படுத்துதல், நாட்டு மருந்துகளை அதிகம் கண்டறிதல், இன்றைய நடைமுறையில் அதிகம் இடம் பெற்றிருக்கும் ஆங்கில மருத்துவ முறையுடன் இணைந்து நாட்டு மருத்துவத்தைப் பயன்படுத்தி செயல்பட்டால் நாட்டு மருத்துவம் மிகப்பெரிய வளர்ச்சி நிலையினை அடையும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**துணைநின்ற நூல்கள்:**

1. டாக்டர். இரத்தின சண்முகம், இயற்கை மருத்துவக் களஞ்சியம், உமா பதிப்பகம், சென்னை – 1997

2. முனைவர்,ஏ.ஆர்.ஈசுவரி, நாட்டுப்புற மருத்துவம்–ஓர்அறிமுகம், தமிழக அரசு, தமிழ் வளர்ச்சிக் கழக வெளியீடு, சென்னை – 5
3. ஏ.ஆர். கண்ணப்பர், நம் நாட்டு மூலிகைகள்(பாகம்-4), மூலிகை மணி வெளியீடு, சென்னை,– 17
4. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,(பி.லிட்), ஆறாம் பதிப்பு – சூன் 2006
5. டாக்டர். க. வேங்கடேசன், தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம், ஸ்ரீ சக்தி பதிப்பகம், சென்னை- 1998


**References**


1. Esuvari A R .Dr, Folk Medicine – An Introduction, Government of Tamil Nadu, Tamil Development Corporation Publication, Chennai – 5
2. Ratna Shanmugam Dr, Natural Medicine Repository, Uma Publishing House, Chennai – 1997.
3. Kannapar AR, Herbs of our country (Part-4), Herbal Mani Publication, Chennai, – 17
4. Vanamamalai N, Tamil Folk Songs, New Century Book House, (B.Litd), Sixth Edition – June 2006
5. Venkatesan Ka .Dr, Siddha Medicine in Tamil Literature, Sri Shakti Publishing House, Chennai- 1998


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**வ. விண்ணொளி ராணி, முனைவர்க.கமலா “ நாட்டுப்புற மக்களின் நாட்டுப்புற மருத்துவம்”** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 12-18

**Cite this Article in English**

**V.Vinnolirani, Dr.Kamala K “ Folk medicine of folk people” Pulam**: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 12-18

# அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்

# Ancient Culture and Customs in Moral Literature

**முனைவர் ச.ஆதிநாராயணசாமி**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி, கோவை – 641010.

**Dr S. Athinarayanasamy**, Assistatn Professor, Department of Tamil, Thavathiru Santhalinga Adigalar arts science Tamil college Perur Coimbatore-10

**DOI : 10.5281/zenodo.7494301**

## Abstract

Various types of literature have appeared in Tamil language from time to time. Among them, justice literatures that emphasize virtue were created during the Kalaprara period. These are classified into eighteen texts. In many of these literary books, news about Tamil life and cultural elements are found in abundance. Every activity of Tamil's natural lifestyle is influenced by culture. This review article examines and discusses the character of such Tamil life and culture in literature. Virtue is a noun. The term aram is derived from the word "to cry". This can be understood with the words 'Aram Sing' and 'Aram Sing'. It is virtue to do without expecting any benefit in helping others. What appeared on behalf of this religion is the literature of charity. These literatures highlight the moral concepts while cultivating human life. The ideals enshrined in the moral literature tend to direct the virtuous life and lead to the paths of blissful salvation. In this way, we can find about the culture and customs of Palandamizhar in the literature.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் மொழியில் காலந்தோறும் பலவகை இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் அறத்தை வலியுறுத்தக் கூடிய நீதி இலக்கியங்கள் களப்பிரர் காலத்தில் உருப்பெற்றன. இவை பதினெண்கீழ்கணக்கு நூல்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ் அறஇலக்கிய நூல்கள் பலவற்றில் தமிழர் வாழ்வியல் குறித்த செய்திகளும் பண்பாட்டுக் கூறுகளும் மிகையாகக் காணப்படுகின்றன. தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலின் ஒவ்வொரு செயல்பாடும் பண்பாட்டின் தாக்கம் நிறைந்ததாக அமைந்துள்ளது. அத்தகைய தமிழர் வாழ்வியலும் பண்பாடும் அற இலக்கியங்களில் அமைகின்ற பாங்கினை ஆராய்ந்து உரைப்பதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

**Keywords:** அறம் இலக்கியம், நீதி இலக்கியம், பண்பாடு, கலாச்சாரம், நாகரீகம், விருந்தோம்பல், நம்மிக்கை, பழக்க வழக்கங்கள்

## முன்னுரை

அறம் என்பது பெயர்ச்சொல்லாகும். அறம் என்ற சொல்லாட்சி "அறுதல்" என்னும் பதத்தில் இருந்து தோன்றியதாகும். இதனை அறம் பாடுதல், அறும்படி பாடுதல் என்னும் சொற்களைக்

கொண்டு உணரலாம். பிறர் பொருட்டு செய்கின்ற உதவியில் எத்தகையதொரு பயனையும் எதிர்பாராமல் செய்வது அறமாகும். இவ்வறத்தின் சார்பில் தோன்றியவை அற இலக்கியங்களாகும். இவ்விலக்கியங்கள் மனித வாழ்வியலைப் பண்படுத்துகின்ற நிலையில் அறநெறிக்குரிய கருத்துக்களை எடுத்துரைக்கின்றன. அற இலக்கியங்களில் இயம்பப்பட்ட கருத்தாடல்கள் செம்மை வாழ்வியலை நன்னெறியில் செலுத்துவதோடு பேரின்பமாகிய முக்திக்குரிய பாதைகளில் வழி நடத்திச்செல்லும் தன்மை கொண்டனவாகவும் அமைகின்றன. அவ்வகையில் அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடு மற்றும் பழக்கவழக்கங்கள் குறித்துக் காணலாம்.

**இறை நம்பிக்கை**

பண்டைய தமிழர் இறைவழிபாட்டில் மிகுந்த நம்பிக்கைகொண்டு இருந்தனர். பெருந்தெய்வ வழிபாட்டைக் காட்டிலும் செறு தெய்வ வழிபாட்டில் மக்கள் பெரிதும் ஈடுபாட்டினைக் கொண்டவர்களாகப் பலியிடுதல் போன்ற சடங்குகளையும் நிகழ்த்தியுள்ளனர். பலங்கால மக்கள் கொண்டிருந்த நம்பிக்கை மற்றும் வழிபாட்டு முறையினை திணைமொழி ஐம்பது எனும் நூல் எடுத்துரைக்கிறது. இதனை,

**"புகழ்மிகு சாந்து எரித்து புல்எரிஊட்டி**
**புகைகொடுக்கப்பெற்ற புலவோர் – துகள்பொழியும்**
**வான் உயிர்வெற்ப இரவின் வரல்வேண்டா**
**யானை உடைய சுரம்"** **திணைமொழி ஐம்பது, பாடல்-1**

எனும் பாடலில் அறியலாம். இப்பாடலில் "நீ வரும் வழியிலே யானை உண்டு ஆதலால் இனி இரவிலே வர வேண்டாம் என்று தலைவனுக்குக் கூறுகின்றாள் தோழி. அப்பொழுது அவனுடைய மலையிலே நடைபெறும் தெய்வ வழிபாட்டை எடுத்துரைக்கின்றார். சந்தனக் கட்டையை வெட்டிக் குவித்து நெருப்பூட்டி அப்புகையால் தேவர்களை வணங்குகின்றனர். இப்புகையைப் பெற்ற தேவர்கள் மழை பெய்யச் செய்கின்றனர் என்ற கருத்தினைக் கொண்டதாக இச்செய்யுள் அமைந்துள்ளது. இவற்றைக் கொண்டு மழை வேண்டி தெய்வத்தை வழிபடும் வழக்கத்தை மக்கள் கொண்டிருந்தனர் என்பதை அறியலாம்.

பழங்கால மக்கல் உயிர்ப்பலியிட்டுத் தங்களுடைய நேர்த்திக்கடனை நிறைவெற்றுவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தனர் என்பதைக் குறிஞ்சி நிலக்கடவுளாகிய முருகனுக்கு ஆட்டுக் குட்டிகளை வெட்டி பூசையிட்ட செய்தியைக் கொண்டு அறிய முடிகிறது. இதனை,

**மறியீர்த்து உதிரம்தூய் வேலன் தரீஇ**
**வெறியோடு அலம்வரும் யாய்"** **ஐந்திணை ஐம்பது, பாடல் – 20**

எனும் பாடலைக் கொண்டு உணரலாம். வேலைக் கையிலேந்தி ஆடுகின்ற பூசாரியை அழைத்து ஆட்டுக் குட்டியை அறுத்து அதன் உதிரத்தை நான்கு திசைகளிலும் சிந்தி முருகனுக்குத் தம்முடைய நேர்த்திக் கடனைப் பழந்தமிழர் நிறைவேற்றியுள்ளனர் என்பது இப்பாடல்வழிப் பெறப்படுகிறது.

நடுகல்

போரிலோ அல்லது வீரச் செயல்கள் புரிந்தோ இறந்தவர்களுக்கு கல் நட்டு வழிபடுகின்ற முறை பழந்தமிழரின் பண்பாட்டுக்கூறுகளுல் முதன்மையானதாகும். இறந்தோரையும் உயர்வுபடுத்தும் தன்மை கொண்டவர்கள் தமிழர்கள் என்பது இதனால் புலப்படுகிறது. இறந்தவர்களுக்கு நடப்பட்ட கற்கள் நடுகல் என்னும் பெயரோடு வழங்கப்படுகிறது. இக்கற்களில் இறந்தவர்களின் உருவமும் படைக்களன்களும் இடம்பெறும். அத்தோடு ஒரே கல்லில் இரண்டு வீரர்களின் உருவங்கலும் செதுக்கப்பட்டுள்ளன. மனித உயிர்களின் உருவங்கள் மட்டுமின்றி சில நடுகற்களில் விலங்குகளின் உருவங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. போரில் இறந்த வீரனுக்கு உதவிய விலங்குகள் அல்லது அவ்வீரன் வீழ்த்திய விலங்குகளின் தோற்றம் நடுகல்லில் இடம்பெறுகிறது. இத்தகைய நடுகற்களைக் குறித்துத் தொல்காப்பியர் கூறுகையில் ஆறு முறைகளைப் பகுத்துரைக்கின்றார். அவை,

1. காட்சி
2. கால்கோள்
3. நீர்ப்படை
4. நடுதல்
5. விழா
6. வாழ்த்துதல்

என்பனவாகும். இவற்றுள் காட்சி என்பது ஒரு கல்லினைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் செதுக்குதல் ஆகும். கால்கோள் என்பது அக்கல்லினை நடுவதற்கு நல்ல சகுனம் பார்ப்பதாகும். இதனைத் தமிழர் நற்சொல் கேட்டல், நிமித்தம் ஆராய்தல் என்ற சொற்களாலும் வழங்குவர். நீர்ப்படை என்பது அக்கல்லை எவ்விடத்தில் நடவேண்டும் எனத் தீர்மானித்தல் ஆகும். விழா என்பது இறந்துபட்ட வீரனின் சிரப்புகளை அக்கல்லில் பொறித்தல் மற்றும் அவனைப் போற்றி விழா எடுத்தலாகும். வாழ்த்துதல் என்பது இறந்த வீரனை நடுகல் வழியாக வழிபடுதல் ஆகும். இந்த நடுகல் வழிபாடு பிற்காலத்தில் சிறுதெய்வ வழிபாடு மிகையாகத் தோன்ற அடித்தளமிட்டது எனலாம்.

நடுகல் முறையை அற இலக்கியங்கள் சுட்டிச் செல்கின்றன். இறந்துபட்ட வீரனின் நினைவாக நடப்பட்ட இந்நடுகல்லின் நிழலிலே கோரைப் பற்கலையுடைய பேயானது படுத்துறங்கும் கொடிய கானகம் என ஐந்திணை ஐம்பது கூறுகிறது. இதனை,

**“ நடுகல் விரிநிழல் கண்படுக்கும் வெம்கானம்”** **ஐந்திணை ஐம்பது, பாடல் – 35**

**கனவின் பலன்**

உறக்கத்தில் தோன்றுகின்ற கனவின்வழி வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழும் எனத் தமிழர் நம்பிக்கை கொண்டிருந்தனர். கனவின் வழி கண்ட காட்சிகளைக் கொண்டு நிகழப்போகும் செயல்களை முன்னரே அனுமானிக்கும் தன்மையினைப் பெற்றவர்களாகப் பழந்தமிழர்கள் திகழ்ந்தனர். சான்றாக,

**"பூம்கண் இடமாகும் கனவும் திருந்தின**
**ஓங்கிய குன்றம் இறந்தாரை யாம்நினைப்ப**
**வீங்கிய மெந்தோள் கவினிப் பிணிதீரப்**
**பாங்கத்துப் பல்லி படும்"** **ஐந்திணை எழுபது, பாடல் – 41**

என்னும் பாடலைக் கூறலாம். இதில் உயர்ந்த மலையைக் கடந்து சென்ற நம் காதலரைப் பற்றி நாம்நினைத்த உடனே அழகிய கண்களிலே இடக்கண் துடிக்கின்றது. கண்ட கனவுகளும் நல்ல கனவுகளாக இருந்தன. இளைத்துப் போன மெல்லிய தோள்கள் அழகுடன் பருத்தன. துன்பம் தீரும்படி பக்கத்திலே பல்லியும் சொல்லும். இவற்றைக் கொண்டு பழந்தமிழர் கொண்டிருந்த கனவுகள் குறித்தான நம்பிக்கையினை அறிய முடிகிறது.

**நம்பிக்கை, பழக்கவழக்கங்கள்**

பசுக்கள், இடையர்கள் ஊதும் கொன்றைக் குழலின் இனிய ஓசையைச் சுவைக்கும். அவர்கள் அக்குழலை ஊதினால் பசுக்கள் கூடும். அவர்கள் ஊதிக் கொண்டே சென்றால் அவர்களைத் தொடர்ந்து அவை செல்லும்.

**"கொன்றைக் குழல் ஊதிக் கோவலர் பின் நிரைத்துக்**
**கன்று அமர் ஆயம் புகுதர"** **ஐந்திணை எழுபது, பாடல் – 22**

'கொன்றைக் குழலை ஊதிக்கொண்டு போகும் இடையர்கள் பின்னே வரிசையாக கன்றை விரும்பும் பசு மந்தை ஊருக்குள் நுழைய' என்பதனால் பசுக்களின் இசை உணர்ச்சியினை அறியலாம்.

நல்ல நாளிலே தொடங்கும் காரியம் இடையூறு இல்லாமல் வெற்றி பெறும் என்பது பழந்தமிழர் நம்பிக்கை. பெண் கேட்கச் செல்வார் நல்ல நால் பார்த்து அந்நாளிலேயே புறப்படுவார்கள்.

**"நாள் கேட்டுத் தாழாது வந்தால் நீ எய்துதல் வாயால்"**

**திணை மாலை நூற்றைம்பது, பாடல் – 46**

இப்பாடலின்வழி நல்ல நேரம் கேட்டுக் கொண்டு தாமதமில்லாமல் வந்தால் இப்பெண்ணை அடைவது உண்மையாகும் என்ற கருத்து பயின்று வந்துள்ளது.

நல்ல நால் பார்த்து அந்நாளிலே திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது. திருமணக்களத்தில் பலரும் அறியும்படி வாத்தியங்கள் முழங்கும்.

**"பல்லார் அறியப் பறையறைந்து நாள்கேட்டுக்**
**கல்யாணம் செய்து கடிபுக்க மெல்இயல்."**

என்னும் பாடல்வழி திருமனம் புரிந்து கொண்டு மனைக்குள் புகுந்தாள் மெல்லிய தன்மையுடையவள் என்பதை அறியமுடிகிறது.

**விருந்தோம்பல்**

விருந்தோம்பல் தமிழரின் சிறந்த பண்பாடு. விருந்தினர் என்பவர் முன்பின் அறியாத புதியவர்கள். எந்நாட்டினராயினும், எம்மொழியினராயினும் நட்புக் கொள்ளும் எண்ணத்துடன் வீடு

தேடி வருவார்களாயின் அவர்களை வரவேற்பவர்கள் தமிழர்கள். விருந்தினரை வரவேற்று உபசரிப்பவர்கள் தாம் மறுமை இன்பத்தைப் பெற முடியும் என்ற நம்பிக்கை தமிழரிடம் குடிகொண்டிருந்தது. விருந்தினரை எவ்வாறு வரவேற்று உபசரிக்க வேண்டும் என்பதை,

**இன்சொல் அலாவல் இடம் இனிது ஊன் யாவர்க்கும்**
**வன்சொல் கலைந்து வகுப்பானேல் – மென்சொல்**
**முருந்து எய்க்கும் முட்போல் எயிற்றினாய்! நாளும்**
**விருந்து ஏற்பர் விண்ணோர் விரைந்து.** **ஏலாதி, பாடல் – 7**

என்ற பாடல் வழி அறியலாம்.

அகத்தின் அழகு நடத்தையில் தோன்ற வாழ்ந்தவர்கள் நம் முன்னோர். அக வாழ்வென்பது அவரவர் மனதோடு நின்று சிறந்தது எனினும் வாழ்வியல் பண்புகள் அங்கே குறைந்துவிடவில்லை. அங்கும் விருந்தோம்பல் பண்பு உள்ளிட்ட பெரும்பண்புகள் யாவும் சிறந்திருந்தன. கண்ணகி கதையிலே கோவலனைப் பிரிந்ததால் தன் இளமை பாழானது குறித்தோ தன்னைத் தான் அழகுற அலங்கரித்துக் கொள்ள இயலாமை குறித்தோ கற்பரசி வருந்தினாளல்லள்.

'அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும் விருந்தெதிர் கோடலும் இழந்ததையே" அவலமாகக் கொள்கிறாள். அதற்கே அகம் நோகிறாள். அப்படி கணவனோடு கற்புநெறியில் வாழும் வாழ்வின் குறிக்கோளாகவே விருந்தோம்பலைக் கருதினர். அதற்கெனவே பெரும்பொருள் ஈட்டினர். இதனை,

**இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு** **திருக்குறள், குறள்-81**

என்னும் வள்ளுவனார் வாய்மொழி விளக்குகிறது. சாவா மருந்தெனினும் விருந்தினரைப் புறக்கணித்து உண்ணாத மாண்பை வாழ்வியல் நூலான வள்ளுவம் காட்டுகின்றது.

**விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா**
**மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று** **திருக்குறள், குறள்-82**

என்று கூறும் வள்ளுவம் விருந்தோம்பலின் சிறப்பைத் தனியே ஒரு அதிகாரம் வாயிலாகச் சுட்டுவது எண்ணத்தக்கது. இக்கருத்தினைப் புறநானூற்றில்,

**"……….. இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்**
**தமியரும் உண்டலும் இலரே"** **புறநானூறு, பாடல் - 182**

என்று கூறுகிறது.

"விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" என்பது பழந்தமிழ்ப் பாடலின் தொடராகும். விருந்து வருவதைக் குறித்த நன்னிமித்தமாகக் காக்கை கரைந்ததைப் பாடிய புலவரைக் "காக்கைப் பாடினியார்" என்று அழைத்தனர்.

**அடக்கமுடைமை**

**"தந்தையே ஆயினும்தான் அடங்கான் ஆகுமேல்**

**கொண்டு அடையான் ஆகல் இனிது.** **இனியவை நாற்பது, பாடல்-8**

தந்தையாயிருந்தாலும் சரி, அவன் அடக்கமற்றவனாயிருப்பின், அவன் சொல்லைக் கேட்டு நடக்காமல் இருப்பதே நலம்.

**கல்வி**

**"பிச்சை புக்காயினும் கற்றல் இனிதே"** **இனியவை நாற்பது, பாடல்-2**

பிச்சையெடுத்தாவது கல்வி கற்றல் மிகவும் சிறந்தது. இது அனைவரும் போற்றக்கூடிய சிறந்த அறிவுரையாகும்.

**பற்பல நாளும் பழுதுஇன்றிப் பாங்குடைய**
**கற்றலின் காழ்இனிது இல்**

பல நாட்களும் சோர்வில்லாமல் சிறப்பு நூல்களைக் கற்பதைவிட மிகச் சிறந்தது வேறொன்றும் இல்லை. இவை கல்வியின் சிறப்பை வலியுறுத்தின.

**"ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன் இனிதே" இனியவை நாற்பது, பாடல்-5**

வேறு ஒரு உயிரின் உடம்பைத் தின்று தன் உடம்பை வளர்க்காமல் இருப்பதே சிறந்த அறம் என்று கூறி புலால் உண்பதைத் தவிர்க்குமாறு கூறுகிறது இப்பாடலடி.

**முடிவுரை**

தமிழரின் இயற்கையோடு இயைந்த வாழ்வியலின் ஒவ்வொரு செயல்பாடும் பண்பாட்டின் தாக்கம் நிறைந்ததாக அமைந்துள்ளது. அத்தகைய தமிழர் வாழ்வியலும் பண்பாடும் அற இலக்கியங்களில் அமைகின்ற பாங்கினை இறை நம்பிக்கை, நடுகல் வழிபாடு, கனவின் பலன், விருந்தோம்பல், அடக்கமுடைமை, கல்வி முதலான நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டது. சங்க கால மக்கள் மழை வேண்டியும், உயிர் பலி கொடுத்தும், இறை வழிபாடு செய்தனர் என்ற அவர்தம் இறைநம்பிக்கை குறித்த இலக்கியச் செய்திகளையும், விருந்தோம்பலில் கொண்டிருந்த ஈடுபாடு, அடக்கமுடைமையை அனைவருக்குமானதான வாழ்வியல் நெறியாகக் கொண்டமை, வாழ்வில் கல்வியின் முக்கியத்துவம் குறித்த அறஇலக்கியச் செய்திகளில் பழந்தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும் அமைந்திருந்த தன்மையினை அறிந்து கொள்ள முடிந்தது.

**துணைநின்ற நூல்கள்**

1. இனியவை நாற்பது, பூதஞ்சேந்தனார், கழக வெளியீடு, சென்னை.
2. ஐந்திணை எழுபது, மூவாதியார், கழக வெளியீடு, சென்னை.
3. ஐந்திணை ஐம்பது, மாறன் பொறையனார், கழக வெளியீடு, சென்னை.
4. ஏலாதி, கணிமேதாவியார்,சாரதா பதிப்பகம், சென்னை.
5. திணை மாலை நூற்றைம்பது, கணிமேதாவியார், கழக வெளியீடு, சென்னை.
6. திணைமொழி ஐம்பது, கண்ணன் சேந்தனார், கழக வெளியீடு, சென்னை.
7. திருக்குறள், திருவள்ளுவர், கழக வெளியீடு, சென்னை.
8. புறநானூறு, கழக வெளியீடு, சென்னை.

**Reference**

1. Iniyavai Narpathu, Boothanchendanar, Kazahgam Publication, Chennai.
2. Ainthinai Ezhubathu, Muvadhiyar, Kazhagam Publication, Chennai.
3. Ainthinai Aimbathu, Maran Poraiyanar, Kazhagam Publication, Chennai.
4. Elathi, Kanimethaviyar, Sarada. Publisher, Chennai.
5. Thinai Malai Nutraimbathu, Kanimethaviyar, Kazhagam Publication, Chennai.
6. Thinaimozhi Aimbathu, Kannan Sentanar, Kazhagam Publication, Chennai.
7. Thirukural, Thiruvalluvar, Kazahgam Publication, Chennai.
8. Poorananuru, Kazahgam Publication, Chennai.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் ச.ஆதிநாராயணசாமி "அற இலக்கியங்களில் பழந்தமிழர் பண்பாடும் பழக்கவழக்கங்களும்"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 19-25

**Cite this Article in English**

**Dr S. Athinarayanasamy " Ancient Culture and Customs in Moral Literature"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 19-25

## சமயத் தத்துவங்கள் புனைந்தெழுப்பும் பெருங்கதையாடல்களும் அறச்சிந்தனைகளும்

## Religious philosophies are fictions and myths and morals

**முனைவர் ப. சின்னச்சாமி,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), சூலூர், கோயம்புத்தூர் - 641402.

**Dr P. Chinnasamy**, Assistant Professor, Tamil Department, Rathnavel Subramaniam College of Arts & Science (Autonomous), Sulur, Coimbatore -641402.

**DOI : 10.5281/zenodo.7494319**

### Absract

Concepts of nature as supernatural in the tradition of human thought created changes and structures in society. Because power is a multi-edged sword it becomes tyrannical. It creates many traditions of thought to control one, and takes as its primary adjunct the postmodern philosophical ideologies. Concepts fulfill the task of suppressing rebellious languages that run beyond it. In this way, this article highlights the manner in which the materialist ideas manifested in the moral concepts during the period of moral literature have manifested the riotous discourses and the activities of religious ideologies which established the dominant powers by promoting materialism.

### ஆய்வுச் சுருக்கம்

மனித சிந்தனை மரபில் இயற்கைXஇயற்கைக்கு அப்பாற்பட்டது என்ற பொருள்கோடல்கள் சமூகத்தில் மாற்றங்களையும் கட்டமைப்புகளையும் உருவாக்கின. அதிகாரம் என்பது பல்முனை கொண்ட கூர் ஆயுதம் என்பதால் அது கொடுங்கோன்மைத் தன்மையானதாகிறது. அது ஒருவனைக் கட்டுப்படுத்த பல சிந்தனை மரபுகளை உருவாக்குவதுடன், கருத்துமுதல்வாதத் தத்துவக் கருத்தியல்களை முதன்மைத் துணையாகக் கைக்கொள்கிறது. அதை மீறி இயங்கும் கலக மொழிகளை ஒடுக்கும் பணிகளைக் கருத்துருவங்களின்வழி நிறைவேற்றுகின்றன. அவ்வகையில் அற இலக்கிய காலகட்டத்தில் அறக் கருத்துக்களில் வெளிப்படும் பொருள்முதல்வாத சிந்தனைகள் கலக மொழியாடல்களை வெளிப்படுத்தியுள்ள விதத்தையும் சமயக் கருத்தியல்கள் கருத்துமுதல்வாதத்தை முன்னிறுத்தி ஆதிக்க அதிகாரங்களை நிறுவிய செயல்பாடுகளையும் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

**Keywords :** பொருள், கருத்து, சமயம், தத்துவம், அறம், இலக்கியம்

### அறச்சிந்தனைகளும் சமயத் தத்துவங்களும்

இந்தியச் சமய, தத்துவ சிந்தனை மரபில் உலகாயதம் என்ற ஒற்றைப் பொருள்முதல்வாதத் தத்துவத்தை வீழ்த்துவதில் கருத்துமுதல்வாதத் தத்துவமும் பொருள்முதல்வாதத் தத்துவமாகத் தோற்றங்கண்டு காலப்போக்கில் வைதீகக் கருத்தியல்களை உட்செறித்துக்கொண்ட பூர்வ மீமாம்சம், வேதாந்தம், வைசேசிகம், நியாயம், சாங்கியம், யோகம் ஆகிய தத்துவங்களும் வேத தத்துவத்திற்கு எதிரிணையாக நின்ற சமண, பௌத்தமும் செயலாற்றியிருப்பதைத் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா போன்ற தத்துவ அறிஞர்களின் கருத்துகள் அறியப்படுத்துகின்றன.

தமிழ்ச் சிந்தனை மரபு இயற்கைமையவாதத்தை முதன்மையாகக் கொண்டு அக உலகையும் புற உலகையும் அனுபவவாதத்திலிருந்தே அணுகியிருப்பதைச் சங்க நூல்கள் காட்டுகின்றன. அதன்பிறகான அற இலக்கிய காலகட்டத்தில், கடவுள் என்ற கருத்துருவம் சமூகத்தில் உயிர்ப்புற்றிருப்பதையும் அதுகுறித்து விவாதிக்கப்பட்டிருப்பதையும் அறநூல்கள் வெளிப்படுத்துகின்றன.

**“உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்**

**தலகையா வைக்கப் படும்” (குறள். 850)**

என்ற அறமொழிவு, ‘உலகத்தார் உண்டு என்று சொல்வதை இல்லை என்று கூறுகின்றவன், உலகத்தில் காணப்படும் பேயாகக் கருதி விலக்கப்படவேண்டியவன்’ என்று கருத்துரைக்கிறது. இங்கு உலகத்தார் என்பது உடைமைச் சமூக ஆதிக்கவாதிகளும் பேரறிவாளர்களுமாவர். இவர்களின் கருத்தே உலகக் கருத்தாக நிலைநிறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கடவுள் கருத்தாக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது என்பது அறியலாகிறது. அதேசமயம்,

**“............................ உலகினுள்**

**இல்லதற்கு இல்லை பெயர்” (பழமொழி. 83:3-4)**

என்பது முன்னோர் வழக்காக இருந்துள்ளமை அடையாளப்படுத்தப்படுகிறது. இவ்வாறு கடவுள் குறித்து இருவேறு கருத்துநிலைகள் நிலவியிருப்பதையும் அதை மையமிட்டு சமயங்கள் நிறுவனவயப்பட்டிருப்பதையும் அது அதிகாரச் சார்படைந்து உலக இயல்பாகக் கட்டமைந்திருப்பதையும் காணமுடிகிறது.

வைதீகச் சமயம் நால்வருணக் கோட்பாட்டைத் தவிர மற்ற அனைத்துக் கருத்தியல்களையும் சமூக நடைமுறையில் நிலவிய கருத்தாக்களைக் கொண்டு சீர்திருத்த முயன்றன. சமூகத் தகுதியை அடைவதற்கு தங்களுக்குள்ளேயே முரண்பட்ட கருத்துகளை வளர்த்தெடுத்துக் கொண்டு பன்முகப்பட்டச் சமயமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ள அடித்தளத்தை அமைத்து கொண்டது என்பதை,

**“அவதாரம் என்று ஒன்று இல்லை. கடவுள் இல்லை. சொர்க்கம், நரகம் என்றெதுவுமில்லை. பரம்பரையாக இருந்து கொண்டிருக்கும் புனித நூல்கள் யாவும் மூடர்களால் இயற்றப்பட்ட ஏமாற்றுக் கற்பனைகளே. ஆக்கும் சக்தியான இயற்கை, அழிக்கும் சக்தியான காலம் இவை இரண்டும்தான் எல்லாவற்றையும் ஆட்சி புரிகின்றன. இந்த இரு ஆட்சியாளர்களும், மனிதனின் நன்னெறி அல்லது தீயநெறி இவற்றைப் பார்த்து, அவர்களுக்கு இன்பமோ துன்பமோ கொடுப்பதில்லை. போதையூட்டும் பேச்சுக்களால் கவரப்பட்டு, மக்கள் தவறான வழிகளில் இழுத்துச் செல்லப்படுவதனால், கடவுள், கோவில், புரோகிதர் என்று அலைகிறார்கள். (2010, பக். 88-89)**

என்று பிரேம்நாத் பசாஸ் சுவம்சவேதத்தின் இரண்டாவது சூத்திரத்தை மேற்கோளிட்டுக் காட்டியிருப்பதன் வழி அறியமுடிகிறது.

அற இலக்கிய காலத்தில் சமண, பௌத்த சமயங்கள் ஆதிக்கம் செலுத்தியவையாகவும், வைதீகச் சமயம் தனது இருப்பைத் தக்கவைத்துக்கொள்ள முயல்பவையாகவும் அறநூல்களில் சமண, பௌத்தக் கருத்தியல்கள் பெரும்பாண்மை இடம்பெற்றிருப்பதன்வழியும் வேதாந்தச் சிந்தனைகள் சமூகத் தகுதியை அடைந்திருப்பதன்வழியும் விளங்கமுடிகிறது.

இதனடிப்படையில், அறநூல்களின் சமயம் குறித்த பார்வையையும் உழைப்பின் பயனை இழிவாக்கும் பெருங்கதையாடல்களைக் கட்டமைக்கப்பட்ட புனைவுகளையும் எடுத்துரைக்கும் விதமாக,

1. சமயமும் ஆராய்ந்து அறிதலும்
2. வேதமும் வேள்வியும்
3. நிலைத்தலில்லாதவற்றை நிலைத்திருக்கச் செய்தல்

என்ற பொருண்மைகளின்கீழ் விளக்குவது அவசியமாகிறது.

**சமயமும் ஆராய்ந்து அறிதலும்**

அறநூல்கள் சமயக் கருத்துகளை அறக் கருத்துக்களாக உள்வாங்கியிருப்பதுடன் அதை நடைமுறைப்படுத்த முனைகின்றன. பல்வேறு சமயக் கருத்துகளின் தொகுப்பாக இந்நூல்கள் நிலைகொண்டிருந்தாலும் அனைத்துச் சமயங்களின்மீதும் நாட்டம் கொண்டிருக்காமல் அதில் நிலவுகின்ற நற்கருத்துகளை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டியதைக் குறிப்பிடுகின்றன.

**“பரந்தவர் கொள்கைமேல் பல்லாறும் ஓடார்**
**நிரம்பிய காட்சி நினைந்தறிந்து கொள்க**
**வரம்பில் பெருமை தருமே; பிரம்பூரி**
**என்றும் பதக்கேழ் வரும்” (பழமொழி. 305)**

என்ற அறமொழிவு, ‘பலவாறாகப் பரந்து விளங்கும் சமயத்தார்களுடைய வேறு வேறான கொள்கைகளின்மேல் எல்லாம் மனம் செலுத்திப் பல்வேறு வழிகளிலும் ஓடிக்கொண்டிருக்காது, அக்கொள்கைகளுள் எல்லாம் நன்மை நிரம்பிய உண்மையை ஆராய்ந்து அறிந்து அஃது ஒன்றையே மேற்கொள்க. அதுவே எல்லையில்லாத பெருமையைத் தரும்’ என்றுரைக்கிறது. சமயம் என்பதே கருத்துமுதல்வாதத்தின் அடிப்படையாக இருக்கும் நிலையில் அதை ஆராய்ந்து அறிந்து பின்பற்றுவதென்பது சிக்கலுக்குரியதாகிறது. சமயம், அடங்கியிருத்தல், பணிந்திருத்தல் போன்ற உடல்மொழிகளின்வழி மனிதனைக் கட்டுக்குள் கொண்டுவரும் கருத்துருவ இயந்திரமாக விளங்குகிறது. வைதீகச் சமயம் கட்டமைத்த வர்ண படிநிலையில் ஒருவன் வர்ணத்தை ஆராய்ந்து தேர்ந்தெடுக்கமுடியாது. ஏனெனில், அது பிறப்பின் தகுதியைக் கொண்டது. ஆனால், சமயம் ஒருவனின் பிறப்பினடிப்படையில் தீர்மானிக்கப்படுவதில்லை. ஆதலால், அதனை ஆராய்ந்து அறிந்து பின்பற்றுவது அனுமதிக்கப்படுகிறது என்பற்கு மேற்கூறிய அறமொழிவு சான்றாகிறது.

நிலவுடைமைச் சமூகத்தில் உருப்பெற்ற புனிதம்Xஇழிவு என்ற சமயப் பண்பாட்டுக் கருத்தியல் அடித்தளத்திலிருந்து உழைக்கும் மக்களைச் சுரண்டும் தத்துவார்த்த சொல்லாடல்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு அற இலக்கியம் நன்மை, தீமை என்பதனடிப்படையில் சமூகத் தகுதியை வழங்கியது. அறிவுக்கு அப்பாற்பட்டதாகச் சமயம் கட்டமைக்கப்பட்ட நிலையில் ஆராய்ந்து அறிந்து தேர்ந்தெடுக்கும் அறிவு என்பது மேட்டிமைக் கருத்தாக நிலைப்பெறுகிறது. வைதீக சமயம் வருண அடிப்படையில் பார்ப்பனர்களை மட்டுமே அறிவில் சிறந்தவர்களாக அறிவிக்கிறது. சூத்திரர்களை அறிவுக்கு அப்பாற்பட்டவர்களாகக் கட்டமைக்கிறது. ஆனால் சமணமும், பௌத்தமும் அறிவைச் சமூகவயப்படுத்துகிறது. இம்முரண் நிலைக்குள் தமிழ்ச்சமூகம் தான்தோன்றித்தனமாக இயங்காது, சமயத் தேர்வில் அறிவுடன் இருக்கவேண்டியது குறித்து எடுத்துரைப்பதன்வழி அன்று நிலவிய சமயப் பூசல்களையும் சமய ஆதிக்கத்தையும்

வெளிப்படுத்துவதாக உள்ளது. இதன்நீட்சியாக, சமயத்தை ஆராய்ந்து அறிதல் சிக்கலானது. இந்தக் கருத்தியல் இன்றைய காலகட்டம் வரை நீடித்து வருவதை,

**“முதலாவது, மதம் மனிதனின் அறிவையே அடியோடு கெடுத்துவிடுகிறது. இரண்டாவது, மனிதர்களின் ஒற்றுமைக்குப் பதிலாக மனிதனை மனிதன் பிரித்துக்காட்டவே மதம் உதவுகிறது. மூன்றாவதாக, மதமானது மனிதனை வேடத்திலேயே திருப்தி அடையச் செய்கின்றதே ஒழிய, ஒழுக்கத்தில் சிறிதும் கவலை செலுத்த நிர்பந்திப்பதில்லை. நான்காவது, எந்த மதத்திலும் பகுத்தறிவுக்குச் சிறிதும் இடம் இல்லை. ஏனென்றால், எவ்வளவு நல்ல மதமானாலும் முதலில் ஏதாவதொன்றை - அதாவது நமது அறிவிற்கும், பஞ்சேந்திரியத்திற்கும் எட்டாததைக் குருட்டுத்தனமாய் நம்பித்தான் ஆகவேண்டும் என்று சொல்லாமல் இருப்பதில்லை. அப்படியானால், அம்முறையில் ஒன்றை நம்பிவிட்டு, அதேபோன்ற மற்றொன்றை நம்பாமலிருப்பதற்குக் காரணமில்லை. அய்ந்தாவது, மதமானது கடவுளுக்கும் நமக்கும் இடையில் தரகர்களை உண்டாக்கி, அத்தரகர்களின் நடவடிக்கையையும், வார்த்தையையும் - அது எவ்வளவு அசம்பாவிதம் ஆனாலும், சொந்த அறிவைவிட, பிரத்தியட்ச அனுபவத்தைவிட மேலானதாக நினைக்கச்செய்கிறது. அன்றியும், மதமானது பணச்செலவு செய்யும் அளவுக்கு மோட்சமும் பாவமன்னிப்பும் இருப்பதாகவும், எவ்வித அக்கிரமங்களுக்கும் வணக்கத்தின் மூலம் மன்னிப்பு இருப்பதாகவும் நம்பச் செய்வதால், மனிதனை அக்கிரமம் செய்யவும், அவ்வாறு செய்வதன்மூலம் பணம் சம்பாதிக்கவும் தூண்டுகிறது. சோம்பேறிப் பிழைப்புக்குத் தாராளமாய் மதம் இடம் கொடுக்கிறது. (2016, ப. 217)**

என்று மதம் குறித்த நீண்ட விளக்கத்தைப் பெரியார் இருபதாம் நூற்றாண்டில் முன்வைக்கிறார். இக்கருத்தானது அற இலக்கியம் மொழியும் ‘ஆராய்ந்து அறிந்து சமயத்தைத் தேர்வு செய்யும் உரிமை’யில் உள்ள சிக்கலுடன் பொருந்திபோகிறது. சமயம் மக்களைச் சிந்திக்க அனுமதிக்காத ஒன்றாகவும், கேள்விக்கு அப்பாற்பட்டதாகவும் அம்மதநூல்களால் புனிதப்படுத்தப்பட்டுள்ளன. இதை மறுதலிக்கும் பொருட்டு சிரமண சமயங்கள் ஆராய்ந்து அறிந்து தேர்ந்தெடுக்கும் உரிமையை மக்களுக்கு வழங்குகின்றன.

**வேதமும் வேள்வியும்**

வைதீகச் சமயத்தின் அடித்தளமாக அமைந்திருப்பது வேள்வியாகும். வேள்வியின் காரண காரியத்தை வேதங்கள் நீண்ட எடுத்துரைப்புகளின் விளக்குகின்றன. தீய நிமித்தத்தை மாற்றியமைத்து அதிலிருந்து தற்காத்துக் கொள்ள தீ மூட்டி, விலங்குகளைப் பலியிட்டு, மந்திரங்கள் ஒலித்து, யாகம் செய்விக்கப்பட்டால் அதற்குப் பலன் கிடைக்கும் என்று பார்ப்பனியம் மறைமொழியாகக் கட்டமைத்து அதற்கான தகுதியை ஈட்டிக்கொண்டது என அம்பேத்கர் போன்ற அறிஞர்கள் எடுத்துரைக்கின்றனர். சங்க காலத்திலும் வேள்விகள் நிகழ்த்தப்பட்டதற்கானச் சான்றுகள் கிடைக்கின்றன. ஆனால், அற இலக்கிய காலத்தில்,

**“அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்**
**உயிர்செகுந் துண்ணாமை நன்று” (குறள். 259)**

என்று வேள்விக்கு எதிரிணையான கருத்துகள் உருப்பெற்றிருப்பதைத் திருக்குறள் உறுதிப்படுத்துகிறது. ‘நெய் முதலியப் பொருட்களைச் சொரிந்து ஆயிரவேள்விகள் செய்தலின்

ஒருயிரைக் கொன்று தின்னாமை மேல்' என்றுரைப்பதில் வேள்வியில் குதிரை, பசு, காளை போன்ற விலங்குகளைப் பலியிட்டு அதன் ஊனை உண்டிருக்கின்றனர் என்று வரலாற்றறிஞர்கள் குறிப்பிடுவதற்குச் சான்று பகர்கின்றது. 'விலங்குகள் இரண்டாம் தரமானவையாகவும், மனித பலி முதல் தரமாகவும், வேள்வியில் இடப்பட்ட மனித உடலைப் பலியிடுவோர் உண்ட பழக்கமும் இருந்துள்ளது' **(2018, ப. 274)** என்று அம்பேத்கர் குறிப்பிடுகிறார். இப்பலியானது, **"மேலுலகப் பேரின்பத்தை அடைவதற்கு மட்டுமின்றி, இந்தப் பூமியில் பலவற்றைப் பெறுவதற்காகவும்" (2018, ப. 273)** நிகழ்த்தப்பட்டது என்று எடுத்துரைக்கிறார். இந்நிலையிலிருந்துதான் சமணமும் பௌத்தமும் 'கொல்லாமை' என்ற தத்துவார்த்தக் கருத்தியலை உருவாக்கி, சமூகத்தில் நடைமுறைப் பழக்கமாக்க முயன்றன. ஒருயிரைக் கொல்லுதல், அதைப் புசித்தல் என்பது இழிவானதாகக் கட்டமைத்தன. இதை நியாயப்படுத்தும் நான்வேதத்தைக் கடுமையான விமர்சனத்துக்குள்ளாக்கின.

வேதம் என்பது நிலைத்திருப்பது, புனிதமானது, பொய்யாதது என்றும் வேள்வி செய்தலே சொர்க்கத்திற்கான வழி என்றும் வைதீகச் சமயம் பெருங்கதையாடல்களைக் கட்டமைத்தது. வேதத்திற்கு நிகரானது எதுவும் இல்லை, அது சநாதனமானது, வேள்வி செய்தல் இறைமைக்குக் கொடுக்கப்படும் ஊதியம் என்று கூறப்பட்ட கருத்தியலை எதிர்க்கும் விதமாக,

**"……… - தொன்மரபின்**
**வேதம் உறுவன பாட்டுள வேளாண்மை**
**வேள்வியோ டொப்ப உள" (நான்மணி. 54:2-4)**

என்ற அறமொழிவு கட்டமைகிறது. 'பழைய முறைமையினையுடைய வேதக் கருத்துக்களுக்குப் பொருந்துவனவாகிய சில தனிப்பாட்டுக்களும் உள்ளன. வேள்விகளுக்கு நிகராவனவாகிய ஈகைகள் உள்ளன' என்று வேதம், வேள்வி குறித்த பெருங்கதையாடல்களை உடைக்கிறது. வேதமே சிறந்த அறிவுத் தொகுதி என்ற கட்டமைப்பிற்கு எதிராக அதற்கு இணையான அன்றைய சூழலில் இருந்த சீர்திருத்தவாத கருத்தியல்களை அடையாளப்படுத்துகிறது. வைதீகச் சமயம் இந்தியச் சிந்தனை மரபில் பெரும் ஆதிக்கம் செலுத்திய சமய மரபுகளை அழித்தொழித்த அல்லது தன்வயப்படுத்திக் கொண்ட சமயமாகும். வேதாந்தத்தின் தத்துவார்த்த அடித்தளமானது,

**"வேதாந்தம் என்பது, முழுமையான அறிதல் இன்றி, வெறும் ஊகங்களின் அடிப்படையில், அதீதக் கற்பனைகளோடு புனைவு செய்யப்பட்ட, நம்பகத் தன்மையற்ற, மெய்ப்பிக்க முடியாத தத்துவங்களைக் கொண்டு விரிவாக்கப்பட்ட இறையியல் என்பதே உண்மை" (2010, ப. 93)**

என்ற முறைமையில் வெற்று தத்துவார்த்த அல்லது தத்துவம் என்று சொல்லிக்கொள்ள முடியாத கருத்துருவமாக உள்ளது என்று பிரேம்நாத் பாசாஸ் கருத்துரைக்கிறார்.

வேள்வி என்ற செயல்பாட்டை ஈகை என்ற கருத்தியல்வழி சிதைவிற்குட்படுத்துகிறது. வேள்வி ஆதிக்கவர்க்கத்திற்கானது. இதனால்தான் இது சுரண்டும் வர்க்கத்தின் அதிகாரப்பூர்வ மதிப்பைப் பெறமுடிந்தது, விளிம்புநிலை மக்கள் வேள்விக்கு அப்பாற்பட்டவர்கள். அவர்களுக்கும் வேள்விக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது என்பதை,

**"எல்லாவற்றினும் முக்கியமான யாகச் சடங்கினைக் கட்டுப்படுத்துதல் வாயிலாகப் பிறர் மீது பிராமண மேலாதிக்கத்தின் அடிப்படை நிறுவப்பட்டது. பிரபஞ்சத் தன்மை கொண்ட, யாவற்றுக்கும் முதன்மையான யாகத்தினால்தான் பிரபஞ்சம் உருவாக்கப்பட்டது, யாகங்கள்**

**தொடர்ந்து செய்யப்படுவதால்தான் உலகம் இயங்குகிறது என்று பிராமணர்கள் கருதினார்கள். இந்தத் தர்க்கத்தின் பின்னாலுள்ள உள்நோக்கம் தெளிவானது - யாகத்திற்குத் தலைமை தாங்குவதன் வாயிலாக மேலுள்ள தெய்வங்களுக்கும் கீழுள்ள மனிதனுக்கும் இடைத்தரகனாக பிராமணன் செயல்படுகிறான். அதனால் உலகத்தை இயங்க வைக்கிறான். ஆகவே நலமாக இருக்க விரும்பும் மேற்சாதியினர் எவரும் பிராமணனை அணுகித் தன் சார்பாக யாகத்தை நடத்த வைக்க வேண்டும்" (2018, ப. 75)**

என்ற ப்ரஜ் ரஞ்சன் மணியின் கருத்து விளக்குகிறது. அதனால்தான் உழைக்கும் வர்க்கத்திற்குத் தொடர்பான ஈகையை வேள்விக்கு நிகராக முன்னிறுத்துகிறது. வேள்வி செய்தால் செல்வம் கிடைக்காது, உழைக்கும் வர்க்கத்திற்கு ஈதலை செய்தால் மட்டுமே செல்வம் பெருகும் என்ற கருத்து இதனுள் ஊடாடுகிறது. செல்வந்தர்களை, அதிகார வர்க்கத்தை உழைக்கும் மக்களை நோக்கி திருப்ப முனைகின்றன. வேளாண்மை என்பது உழவுத் தொழிலைக் குறிக்கும் சொல்லாக இருப்பதால், உழவுத் தொழிலை இழிவானதாகக் கட்டமைத்த மனுதர்ம சாஸ்த்திரத்திற்கு மறுமொழியாக வேள்வியையும் வேளாண்மையையும் சரிநிகரானதாகக் கட்டமைக்கும் செயல்பாடு இயக்கம் பெற்றிருப்பது வெளிப்படுகிறது. பார்ப்பனியத்தின் ஆதிக்கத்தை நிறுவிக் கொள்ள புனையப்பட்ட கருத்தியல்களே வேதமும், யாகமும் என்பதையும் அதேசமயம் அதை எதிர்க்கும் கருத்தியல்களும் உருவாகியிருந்தன என்பதையும் மேற்கண்ட சான்றுகள் உறுதிபடுத்துகின்றன.

இவ்வாறு தன்னிலைக்கான அறங்களைக் கட்டமைக்கும் அறநூல்கள் சமயக் கருத்துகளைக் கொண்டிருந்தாலும் சமூகத்திற்கு இசைவான அறங்களை மொழிவதில் அக்கறை கொண்டிருப்பது வெளிப்படுகிறது. வைதீகச் சமயம் ஆழமாகக் காலூன்றுவதற்கு முன்பே அதனுடைய சடங்குகளையும் நூல்களையும் எதிர்க்கும் நிலை உருவாகியிருப்பதை மேற்கண்ட தரவுகளின்வழி அறியலாகிறது. சடங்கு நூல்களை எதிர்த்தாலும் அதன் கருத்துமுதல்வாத சொல்லாடல்களைச் சமணமும் பௌத்தமும் மறுதலிக்கவில்லை. மாறாக உட்செறித்துக்கொண்டு அதைத் தனது அற மொழிவிற்குப் பயன்படுத்தி அதற்குச் சமூகத் தகுதியை வழங்குகின்றன.

**நிலைத்திருக்காதவற்றை நிலைத்திருக்கச் செய்தல்**

வேற்று உலகத்து கதையாடல்களை முன்னிறுத்தி புகுந்த வைதீகச் சமயமானது இறையியல் கொள்கைகளைக் கட்டமைத்து அது நிலைத்திருக்கக் கூடியது என்று நிறுவின. வேலன் வெறியாட்டு, பறவை ஒலி, இயற்கை நிகழ்வு கொண்டு குறிகேட்டல்வழி சங்கச் சமூகம் பணியை மேற்கொண்டது. ஆனால் வைதீகச் சமயத்தினர், குறி கேட்டல் என்பதைச் சகுனம் பார்த்தலாக மாற்றி சமூகத்தில் நிலவிய இன்ப. துன்ப நிகழ்வுகளை அனுமானித்துச் சொல்லும் சாஸ்த்திர நூல்களை இயற்றி அதன்வழியே இயற்கையின் இயங்கியலைத் தீர்மானிக்கும் வல்லமையாளர்களாக உருவகித்ததுடன் அதற்கு உயர்தகுதியையும் வழங்கிக்கொண்டனர். சங்கச் சமூகக் குறி கேட்டலில் பரிகாரம் இல்லை. ஆனால் சாஸ்த்திர நூல்கள் பரிகாரங்களை வழங்கின. முன்னது இயற்கையின் இயல்பை அனுமானிக்கும் பொருள்முதல்வாதமாகும். பின்னது இயற்கையின் இயல்பை மறுதலிக்கிற அல்லது நிலைத்திருக்காத இயற்கை இயங்கியலை நிலைத்திருக்கச் செய்வதாய் கட்டமைக்கப்பட்ட கருத்துமுதல்வாதமாகும்.

நிலவுடைமைச் சமூகம் செல்வம், உடல் நிலைத்திருத்தல் குறித்து மிகுந்த அக்கறை கொண்டிருந்ததை நிலையாமைக் கருத்தாக்கத்தின்வழி அறியமுடிகிறது. உடைமையை நிலைத்திருக்கச் செய்யவும் வாழ்வியலின் ஒவ்வொரு நிகழ்வுகளையும் அறிந்து கொள்வதுடன் அதனால் ஏற்படும் நன்மை, தீமைகளை முன்பே அறிந்து தீயச் சக்திகளிலிருந்து தற்காத்துக்

கொள்ளவும் உடைமைவர்க்கம், பார்ப்பனியம் கட்டமைத்த சோதிடம், சாஸ்த்திரக் கதையாடல்களை நம்பத் தொடங்கினர். இதற்கு,

**"தலைஇய நற்கருமஞ் செய்யுங்கா லென்றும்**
**புலையர்வாய் நாட்கேட்டுச் செய்யார் - தொலைவில்லா**
**அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்க வளர்வாய்ச்சொல்**
**என்றும் பிழைப்ப தில்" (ஆசார. 92)**

என்ற அறமொழிவு சான்றாகிறது. புலையர்Xபார்ப்பனர் என்ற எதிர்முரணைக் கட்டமைத்து, 'நற்செயல்களைச் செய்யுமிடத்து எப்போதும் புலையரிடத்து நாள்கேட்டுச் செய்யக் கூடாதென்றும் கேடில்லாதப் பார்ப்பனரிடத்து நாள் கேட்டே நற்கருமம் செய்ய வேண்டுமென்றும் அவர் வாய்மொழி என்றுமே பிழைபடுவன அல்ல' என்று பார்ப்பனரர்களின் வாய்ச் சொல்லிற்கு ஆற்றல் இருப்பதாக நம்பவைக்கும் செயலைச் செய்கின்றது. இங்கு புலையன் என்பது சங்ககாலச் சமூகத்தில் குறிகேட்டல், வெறியாட்டு நிகழ்த்தியிருந்த மக்களைக் குறிப்பதாகக் கருத இடமளிக்கிறது. இவர்கள் பொருளாதாரத்தை மையப்படுத்தி இப்பணிகளில் ஈடுபடவில்லை. ஆனால், வைதீகச் சமயத்தைக் கட்டமைத்தப் பார்ப்பனர்கள் சோதிடம், சாஸ்த்திரங்களை எழுதி, அதன்வழி பொருளீட்டும் பணியை மேற்கொண்டனர் **(2018, ப.264)** என அம்பேத்கர் குறிப்பிடுவதன்வழி பார்ப்பனர்கள் அக்கதையாடல்களைக் கட்டவிழ்த்து விட்டிருப்பது பொருளாதாரத்தை மையமிட்டுதான் என்பது வெளிப்படுகிறது. அத்துடன் வேலன் வெறியாட்டு போன்ற நிகழ்வுகளைப் பேய், பிசாசு ஓட்டுதலாக மடைமாற்றி மரபார்ந்த சிந்தனையிலிருந்து விலக்கி கருத்துமுதல்வாதச் சிந்தனையை மக்களின் சிந்தைக்குள் பார்ப்பனியம் திணித்துள்ளது.

சாஸ்த்திர, சோதிட நம்பிக்கைகள் தன்னம்பிக்கை, முயற்சி என்பவற்றைச் சிதைத்து ஆகூழை முன்னிறுத்தியது. முன்செய்த வினை, கரும வினையாகி தொடர்ந்து வருவதாக நம்பவைக்கப்பட்டு, மக்களின் உழைப்பைச் சுரண்டும் பணியை ஆதிக்கவர்க்கம் தலைமேற்கொண்டு செய்தது. வினை நீக்குவதற்குப் பரிகாரங்களைக் கூறி சமூகத் தகுதியை வளர்த்தெடுத்தது. அரசர்கள் போர்த் தொடுக்கச் செல்லும் போதும், அதில் வெற்றி பெறவும், திருமணத்திற்கும், சந்ததி உற்பத்திக்கும் நன்நிமித்தம் பார்த்து பணியை மேற்கொண்ட இச்செயல்பாட்டை எதிர்க்கும் விதத்தில்,

**"நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்**
**தலையாயர் தங்கருமம் செய்வார் - தொலைவில்லாச்**
**சத்தமும் சோதிடமும் என்றாங் கிவைபிதற்றும்**
**பித்தரின் பேதையார் இல்" (நாலடி. 52)**

என்ற அறமொழிவு அமைந்துள்ளது. 'நிலையாமையைக் கருத்தில் கொண்டு, நோயும் மூப்பும் சாதலும் இருத்தலை எண்ணி அறிவுடையார் சிந்தித்துத் தமக்கு உறுதியான காரியங்களைச் செய்து வருவார்கள். நீங்குதலில்லாத சொல்லைக் குறித்த சாஸ்திரங்களும்; சோதிடமும் என்று சொல்லப்பட்ட பல நூல்களையே விடாமல் சொல்லிக் கொண்டு திரிகிற பைத்தியம் பிடித்தவரைக்காட்டிலும் புத்தியினர் உலகத்துள் இல்லை' என்றுரைக்கிறது. சோதிட சாஸ்த்திரங்கள் சிந்தனையைத் தடுக்கும் செயல்முறையாகவும் ஒருவர் சிந்தித்து தனது காரியத்தைச் செய்வது சிறந்ததாகவும் கட்டமைக்கிறது.

**முடிவுரை**

சமண, பௌத்த நெறிகள் வைதீகத்தின் சடங்கு முறைகளுக்கு எதிராக நின்றதுடன், தத்துவார்த்த தளத்திலும் எதிர்த்து தங்களது இருப்பை நிலைநிறுத்தியுள்ளன. இத்தத்துவங்கள் உழைப்பின் பயன் அறிந்து பொருள்முதல்வாதத்தை எடுத்துரைத்ததுடன் தங்களது முந்தைய தலைமுறையினரின் வாழ்வியலான இனக்குழுச் சமூகத்தின் கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததன் விளைவாக இது விளிம்புநிலை மக்களின் ஆதரவைப் பெற்றது என்பதை மேற்கூறிய கூற்றுகள் புலப்படுத்துகின்றன. அத்துடன் வைதீகச் சிந்தனைகளைக் கட்டமைத்த பார்ப்பனியம் அச்சிந்தனைகள் புனிதமானவையாக, அறிவாற்றல் மிகுந்தவையாகக் கட்டமைத்து அதன்வழி மேலான்மையைச் செலுத்தும் கருத்தாடல்கள்களை உருவாக்கிய செயல்பாடுகளுக்கு எதிராக 'பேதையர்' என்றுரைக்கும் கலக மொழியாடல்களும் பயணப்பட்டிருப்பது அறச் சிந்தனைகளின் வழி வெளிப்படுகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. அம்பேத்கர், பி. ஆர்., (2018). அம்பேத்கர் இன்றும் என்றும், (முதற்பதிப்பு). கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.
2. பிரேம்நாத் பசாஸ், (2010). இந்திய வரலாற்றில் பகவத்கீதை. (கே. சுப்பிரமணியன், மொ. பெ.) (மூன்றாம் பதிப்பு). கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.
3. பெரியார், (2016). பெரியார் இன்றும் என்றும். (முதற்பதிப்பு). கோயம்புத்தூர்: விடியல் பதிப்பகம்.
4. ப்ரஜ் ரஞ்சன் மணி, (2018). வரலாற்றில் பிராமண நீக்கம் இந்தியச் சமூகத்தில் ஆதிக்கமும் எதிர்ப்பும் (க. பூரணச்சந்திரன், மொ. பெ.) (முதற்பதிப்பு). பொள்ளாச்சி: எதிர் வெளியீடு.
5. ........, (2015). பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும் உரையும் (எஸ். கௌமாரீஸ்வரி, தொகு.) (ஐந்தாம் பதிப்பு). சென்னை: சாரதா பதிப்பகம்.


**Reference**


1. Ambedkar,B.R, 2018, Ambedkar Indrum Enrum, 1st Edition, Vidiyal Pathippagam, Coimbatore.
2. Premnath Pasas, 2010, Inthiya Varalatril Bhagavath Geetha, (K. Subramaniyan, Translator), 3rd Edition, Vidiyal Pathippagam, Coimbatore.
3. Periyar, 2016, Periyar Indrum Endrum, 1st Edition, Vidiyal Pathippagam, Coimbatore.
4. Praj Ranjan Mani, 2018, Varalatril Piramana Nikkam Inthiya Samukaththil Athikkamum Ethirppum, (K.Poornachandran, Translator ), 1st Edition, Pollachi, Ethir Veliyidu.
5. …….2015, Pathinen Kizhkanakku Nulgal Moolamum Uraiyum (S Gowmaswari) 5th Edition, Chennai, Saradha Pathippagam.

**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**

**முனைவர் ப. சின்னச்சாமி " சமயத் தத்துவங்கள் புனைந்தெழுப்பும் பெருங்கதையாடல்களும் அறச்சிந்தனைகளும் "** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 4, அக்டோபர் 2022, பக். 26-34

**Cite this Article in English**

**Dr P. Chinnasamy " Religious philosophies are fictions and myths and morals" Pulam**: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 4, July 2022, pp. 26-34